
Vol. II.] June, 1910 [No. 12




# CONTENTS

Demise of His Majesty King Edward VII Emperor of India.
Knowledge Par-Excellence ... ... ... 365
Principal Upanishads—The Isa and Kena ... ... 366
The Date of Silapadikaram—M. R. Ry. G. V. S. Maniam ... 369
Envy—M. R. Ry. V. Seshagiri Sastriar Avl. ... ... 371
Progress of Drill Cultivation of Cotton in Tinnevelly District Mr. H. C. Sampson, Director of Agriculture, Southern Range ... ... ... ... ... 373
The Madras Glass Works Co., (Ltd.) by M. R. Ry. A. S. Kasturiranga Aiyer Avl., B.A., L.T. ... ... 376
The Shrew ... ... ... ... ... 380
Birth of Kumara ... ... ... ... 384
Children's Pages ... ... ... ... 389
Ladies' Pages ... ... ... ... ... 391
General News... ... ... ... ... 396

*All rights reserved.*



# சில சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்

## இராமாயண வினாவிடை

### மூன்றாம் பதிப்பு

இதில் இராமாயணக் கதையின் எழுகாண்ட ஸாரமும், ஸந்தேஹமுண்டாகக்கூடிய நிலைமைகளுள்ள விடத்து ஆக்ஷேப ஸமாதானங்களுடன் தீர்ந்த விசாரமும், நீதிகள் போதிக்கக்கூடிய விடத்துபடிப் பினைகளும் காட்டி இயற்றப்பட்ட ஓர் இனிய நூல். சிறுவர் சிறுமிகளும் அறியுமாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதன்றி, பெரியோரது மனத்தையும் களிப்பிக்குமாறு, அத்யாத்ம ராமாயணத்திலும், ஆநந்த ராமாயணத்திலும் கண்ட, இராமாயணத்தின் உட்பொருளும் அநுபந்தமாக இப்புத்தகத்திற்குச் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழில் கம்பனெழுதிய கதைக்கும் வடமொழியில் வால்மீகி எழுதிய கதைக்குமுள்ள வேறுபாடுகள் மற்றோர் அநுபந்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் பல பாடசாலைகளில் பாடபுத்தகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யாவராலும் நன்கு மதிக்கப்படுகிறது. சின்னாட்குள்ளாகவே மூன்றாவது பதிப்பு வெளிவந்திருப்பதே இப்புத்தகத்தின் பெருமையை விளக்கும். நமது புத்தகத்திற்கென்றே இதுவரையும் கண்டிராத புதிய சித்திர படங்களுடன் ஒவ்வொரு காண்டமும் விளக்கப்பட்டிருக்கிறது. இது ம-ா-ா-ஸ்ரீ, ஆ. சி. கஸ்தூரிரங்கய்யர், பி.ஏ., எல்.டி., அவர்களால் இயற்றப்பட்டது.

புதிய பதிப்பு, படங்களுடன் ரூபா **1-0-0.**
விவேகபோதினி சந்தாதாரர்க்கு அணா **12.**

## ஸ்ரீமத் பாகவத வினாவிடை

### முதல்பாகம்

முதலொன்பது ஸ்கந்தங்களின் கதை அடங்கியது. கபிலவாஸுதேவர், த்ருவர், ப்ராசீன பர்ஹிஸ், ரிஷபயோகி, ஜடபரதர், அஜாமிளன் முதலிய மஹான்களின் சரிதையும், ஸ்ருஷ்டி விஷயம், வருணாசிரம தருமங்கள் முதலிய விஷயங்களும், தக்ஷயாகம், கஜேந்திரமோக்ஷம் முதலிய உபாக்கியானங்களும் அமைந்திருப்பதன்றி மஹாப்பிரளயம் சாஸ்திரசிருஷ்டிக்கிரமம், சாஸ்த்ரபுராண ச்ருஷ்டிகளின் பொருத்தம், த்ரிமூர்த்திகளின் ஸமரஸம், நெடுங்கால அளவைகள் இவைகளைப்பற்றிய வியாஸங்களை அநுபந்தமாக உடையது. பரசுராமாவதாரம் வரையுள்ள கதை அடங்கி 10-உயர்ந்த சித்திரப்படங்கள் ஸ்கந்தத்திற் கேற்றவண்ணமடங்கியது.

விலை ரூ. **1**

விவேகபோதினி சந்தாதாரர்க்கு அணா **12**

## ப்ரபாவதி

இது வங்காளிபாஷையில் கனந்தங்கிய நரேந்திரநாதசட்டர்ஜி அவர்கள் இயற்றிய நவீனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. கஷ்டம் கூலிதரும், முயற்சித் திருவினையாக்கும் என்னும் படிப்பினையையும், நெடுங்காலங் கடந்தபின் நடக்கும் மணத்தினால் வரும் ஸுகம் இது முதலியவைகளைப்பற்றிய இனிய செந்தமிழ் நவீனம். ஸரளமாக எவரையும் எடுத்தபின் கீழ்வைக்கமுடியாமல் படிக்கும்படி செய்யும் திறமையுள்ளது. ஸ்ரீ சைலதாதாசாரியாரால் இயற்றப்பட்டது.

விலை அணா **4.**

## மஹாபாரத வினாவிடை

### முதல் பாகம் இரண்டாம் பதிப்பு

**ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக,**

பர்வங்களடங்கியது.

வேதவியாஸர் எழுதிய இதிகாசத்தின் முதலைந்து பருவங்களின் விஷயங்களை வினாவிடை ரூபமாக அமைக்கப்பட்டது. யக்ஷப்பிரசனம் முதலிய உயர்ந்த விஷயங்களடங்கியது. கதை ஸரளமாக யாவராலும் அறியும்வண்ணம் எழுதப்பட்டுள்ளது. கௌரவ பாண்டவர் யுத்தஸந்நதமாகும் வரையுள்ள கதை முழுதும் இதனுள் எழுதப்பட்டு பலபாடசாலைகளில் பாட புத்தகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பொய்யாஸனமிட்டபடம் இதற்குத் தலைப்பில் சேர்க்கப்பட்டதன்றி தமிழ்ப்பாரதத்திற்கும் வியாஸபாரதத்திற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அனுபந்தமாகக் கூட்டப்பட்டிருக்கிறது.

அணா **12**

விவேகபோதினி சந்தாதாரர்க்கு அணா **8**

### இரண்டாம் பாகம்

**பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய, ஸௌப்திக,**

ஸ்திரீபர்வங்களடங்கியது

இதில் யுத்தத்திற்காரம்பமானது முதல் யுத்தமுடிவுவரையுள்ளகதை அடங்கியுள்ளது. முதலில் ஸ்ரீ வாஸுதேவன் அர்ச்சுனனுக்கு உபதேசித்த கீதாஸாஸ்திரம்விளக்கமாகஸந்தேஹமற எழுதப்பட்டிருக்கிறது. இந்தபாகத்துக் கதைகளுள் தமிழ்பாரதத்திற்கும் வடமொழி கிரந்தத்திற்குமுள்ள வேறுபாடுகள் அநுபந்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

விலை அணா **12**

விவேகபோதினி சந்தாதாரர்க்கு அணா **8**

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்



# மாட்சிமைப்பெற்ற அரசன்—சத்ரபதி


## ஏழாவது எட்வர்டாரின் தேக வியோகம்

கனவிலும் நினைக்கமுடியாது இருந்தாற் போலிருந்து அரசன் மரிக்க நேர்ந்த விஷயம் இந்தியநாட்டின் மனத்தைக்கவிந்து துன்ப ஸாகரத்தில் ஆழ்த்திவிட்டதென்று நாம் ஏன் கூறவேண்டும்? அது கூறாமலே வெளிப்படை? 1901௵ ஜனவரி மீ 22-தேதி யன்று இறந்த மாட்சிமைப்பெற்ற அரசி விக்டோரியாவின் பிரிவானது சற்று மறைவதன் முன்னமே நமது அரசனும் 9௵ 3மீ 14 நாட்கள் அரசபுரிந்து இறந்துமாகிவிட்டது. இதுவும் காலத்தின்கொடுமை! இவரைக் கொலைபுரிய பல பேர் போட்டிக்கொண்டிருந்தனர். முதலில் நோய்: அது 1871௵ விஷஜ்வர ரூபமாகியும் 1902௵ ஓர் கட்டிவடிவாகியும் தோன்றி அரசரை மிக்கதுன்பத்திற்காளாக்கிப் பின்னவரை உயிரோடுவிட்டது தெய்வச்செயல்தான். இரண்டாவது அரசுரிமை த்வேஷர்கள் (Anarchists): இவர்கள் கூட்டத் தொருவனாகிய ஸ்பீடீ என்பவன் நமது காலஞ்சென்ற அரசர் ருஷ்யா (Russia) தேசத்தில் சென்ற பீட்டர்ஸ்பர்க் (St. Petersburg) என்னு நகரில் சென்று கொண்டிருக்கும் பொழுது கொலை புரிய

யத்தனித்தது. ஆனால் அப்பொழுது தப்பித்துக்கொண்டதன்றி, தன்னைக்கொலை செய்ய வந்தவனை இவரெதிரில் கொண்டு நிறுத்தின பொழுது மிக்க மன அமைதியோடு "வெறும் முட்டாள்" என்று பதில் கூறினார். மூன்றாவது நமன்: இவன் தன் இயற்கைபோல் இவருயிரைக்கவர்ந்து சென்று நமது நாட்டைத் துன்பக்கடலில் மூழ்த்தினான்.

தன்தாயின் குணமுற்றுங்கொண்டு, எல்லார்க்கு நன்மைபுரிய வேண்டுமென்று கவலையுற்று வாழ்ந்து, தான் இந்தியர்க்காக மிக்க அன்புபாராட்டியதன்றித் தான் அரசுரிமைப் பூண்டதும் இந்தியர் நிலைமையை உயர்த்த புதிய சட்டங்களியற்றியதும், எத்தேசத்திலும் சண்டை சச்சரவு கூடாதென்று 'மத்யஸ்த'மாகி நின்று நடுநிலைமையை நாட்டியதும், சிறுபொழுது முதலிலிருந்து ஜனங்களுடன் பயின்று அவர்களுக்குவேண்டியவற்றையறிந்து வாழ்ந்ததும், இவை முதலாகிய விஷயங்களை யறியாதவருமுண்டோ? ஆனால் இந்தியர்களுக்கு அரசன் மரணம் ஏதோ தூரதேசத்தில் வாழ்ந்து, தன் பிரதிநிதிகளின் மூலமாகத் தமதுநாட்டை ஆண்டவன் இறந்தான் என்னும் விஷயமாத்திரமன்று. அவர்களுக்கு அரசன் என்னும் லக்ஷியம் தெய்வீகத்தன்மைப் பெற்று, பெருமை சிறுமை என்பதைக் கவனியாது, அஞ்சாமன உறுதியோடு தாக்ஷண்யமின்றி நியாயத்தை நடத்தி, மிக்க அன்பொடு, துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனஞ் செய்யும் தெய்விக மூர்த்தமென்னும் எண்ணம் மனத்தைக் கவிந்திருப்பதோடு, ஆங்கில அரசருள் முதல் முதல், தாயின் அநுக்ரஹத்தோடு, இந்தியநாட்டிற்கு வந்து நேராக ஜனங்களின் இயற்கையை யறிந்து சென்றனன் என்னும் ஞாபகம் மூட்டவும், செங்கோல் கைக்கொண்டதும் ஜனங்களுக்கெழுதிய உறுதிமொழியும் நமது ஜனங்களின் ஹ்ருதயத்தை உருக்கியதை நாம் சொல்லவும் வேண்டுமோ?

நமதரசரது மரணம் நமது ஸமூஹத்தார்க்கு மாத்திரமன்றி உலகமுழுதிற்கும் துன்பமூட்டும்; எங்கும் அவர் எல்லாராலும் நன்கு மதிக்கப்பட்டவர். இவ்வாறெல்லாரும் வ்யஸனிப்பது ஓர்பாலிருக்க மாட்சிமைப் பெற்ற அரசி அலக்ஸாண்டரா அம்மையாரின் மனமும், அவர் குழந்தைகளின் ஹ்ருதயமும் எவ்வாறு அலையும், கலங்கும், துன்பக்கடலில் ஆழும் என்று எண்ணுவதும் மிகக்கடினம். வீட்டிற்குத்தலைவனும் நாட்டிற்குத்தலைவனுமிறந்தால் ஒரே குழப்பந்தான். அரசன் இறந்தது எல்லார் மனதையும் ப்ரமையுள் ஆழ்த்திவிடினும், உலகிலெல்லோருடைய ஸுகத்திற்கும் தேசத்தின் க்ஷேமத்திற்கு ஆளாகி நின்று மிக உழைத்த மன்னன் மரித்தான் என்றெல்லோரும் அலமந்து நிற்பினும், தேசமுழுதும் மணியிழந்த நாகம்போல் நிலைமயுறினும், அரசியார்பாலும், அவர் மக்கள்பாலும், உறவினர்பாலும் வீட்டிற்குப்பெரியோன் உயிர் நீத்ததால் உண்டான அநுதாபமின்னதென்று சொல்லிமுடியாது. ஆகையால் தமிழ்வகுப்பார் மாத்திரமன்றி, எல்லா இந்தியர்க்குத்தமது ஹ்ருதயத்தில் மூண்டு கிளம்பி மேலெழும்பு அநுதாபத்தை, அவர் பொருட்டு இப்பத்திரிகை வாயிலாக வெளியிடுவதன்றி இப்பெருந் துன்பப்பெருக்கைத்தாங்கக்கடவுள் அரசியார்க்குஅவர் மக்கள், உறவினர் யாவர்க்கு மனவலியளிக்கவும் விரும்புவதோடு உலகமுழுதும் கவிந்து நிற்கும் துன்பப்பெருக்கத்தையும் வெளியிடுகிறோம்.



சென்னை கண்ணாடித்தொழிற்சாலை—ஸோடா ஸீஸா பண்ணும் இடம்

377, 378-ம் பக்கங்களைப் பார்க்க

355


# விவேகபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி II } ஸாதாரணஸூ வைகாசிமீ 1910-ஸூ ஜூன்மீ { பகுதி 12


## ஞானம்

### KNOWLEDGE PAR-EXCELLANCE

ஸன்மார்க்க வழியில் மூன்றாவதாக இருப்பது ஞானம். இதை ஸாதாரணமாக நாம் கூறும் அறிவு என்று எண்ணி விடப்படாது. ஸாதாரணமாகக் கூறும் அறிவுக்கு அறிபவன், அறிபடும்பொருள், அறியும் தொழில் ஆகிய மூன்று இருத்தல் வேண்டும். இந்தத் திரிபுடி (மூன்றும்) ஒடுங்கிய இடத்து தனித்து, இன்னதென்று வாக்கினாற் கூறொணாத தாயும், மனத்தால் நினைக்கொணாததாயும் உள்ள ஒன்று இருக்கின்றது. அதுவே எக்காலத்தும் உண்மையாக அழிவற்று நிற்பது; மற்றவைகள் எல்லாம் உண்மையல்ல, என்று மாறாது நிற்குநிலைக்கே ஞானம் என்று பெயர். இந்த ஞானத்தை உள்ளவாறு அறிந்து தெளியப்புகுவோம்.

இந்த ஞானத்திற்குக் காரணம் சிரவண, மனன, நிதித்யாஸனம் ஆகிய இவைகளே. இதைத் தாயுமானவர் "கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலாமெய்த் தெளிவு" என்றார். இதில் சிரவணம் குரு சாஸ்திரி முடிவான விஷயங்களை எடுத்துக்கூறுவதைக் கருத்துடன் கேட்பது. மனனம் என்பது சுருதி, யுக்தி மூலமாகக் கேட்ட குருமொழியை மனத்தில் ஆலோசித்து ஒருவாறு நிலைநிறுத்திக்கொள்வது. நிதித்யாஸனம் என்பது குருமொழியின் முடிவில் மனதை நிறுத்தி நிஷ்டை பழகுவது. இவைகளால் பிரஹ்மம் இருக்கிறது என்ற உணர்ச்சியில்லாத நிலையாகிய அஞ்ஞானமும், குருமொழியில் பூர்ண நம்பிக்கை வரவொட்டாது தடுக்கும் ஸந்தேகமும், ஜகத்மெய் தேஹமே நான் என்ற அடிக்கடிவரும் விபரீதபாவனையும் முறையே நீங்க, பிரஹ்மம் இத்தன்மையது என்ற மாறா ஞானமுண்டாகும்.

இந்த ஞானத்தின் ஸ்வரூபம் என்ன? ஸத் (உண்மையானது) இன்னது, அஸத் (பொய்யானது) இன்னது என்று உள்ளபடி பகுத்தறிவதே ஞானமாகும். பகவான் கீதையில் 'ஸத் ஒருநாளும் இல்லாமலிருக்காது, அஸத் என்பது என்னாளும் உள்ளது என்று கூறத் தகாதது' என்று கூறியிருக்கிறார். அதாவது மூன்று காலத்திலும் பாதிக்கப்படாது நிலைத்திருப்பதே ஸத்; ஸதாமாறிக்கொண்டிருப்பதே அஸத் என்பது தெரியவருகிறது. பரம்பொருள் ஒன்றே ஸத்; மற்றவையெல்லாம் அஸத் என்று உணர்வதே ஞானத்தின் ஸ்வரூபம்.

இதில் உள்ளபடி நிலைத்தவன் மனதில் நான் வேறு என்ற எண்ணம் திரும்பவும் எழவொட்டாது தடுத்தலே இதன்காரியம். எப்படிப்பட்ட மஹானாக இருப்பினும் அவன் மனதில் அஹங்காரம் வெகு நுட்பாக ஒளித்திருக்கும். இது பற்றியே ஓர் கவி 'ஆன்றோர் அடி அழுக்கு இவ்வஹங்காரமே' என்று கூறுகிறார். மஹான் சற்று மமர்ந்திருப்பாராயின் இந்த அஹங்காரம் வெளிக்கிளம்பிவிடும். ஜடபாரதர் முதலியோரே இதற்கு உதாரணம். இம்மாதிரி அகங்காரத்தை எழவொட்டாது தடுத்து முடிவில் இதை வேரோடு கல்லுவதே ஞானத்தின் முக்கிய காரியம்.

இந்த ஞானத்தில் எதுவரையில் பழகவேண்டும்? இப்பொழுது நமக்குத் தேகம் நான் என்ற எண்ணம் எவ்வளவு திடமாக இருக்கிறதோ அவ்வளவு திடமாகப் பிரஹ்மம் நான் என்ற எண்ணம் ஸஹஜமாக வரும் வரையில் இந்த ஞானத்தில் பழகவேண்டும். இதைத்தான் திருபுடி பாவம் நீங்குவரையில் பழகவேண்டும் எனப் பெரியோர் கூறுவர்.

இதன்பலம் மோக்ஷம். அதாவது உலக விஷயம் முதலியவைகளிலிருந்து முற்றிலும் விடுபட்டுப் பரம்பொருளாக உள்ளது உள்ளபடி நிற்றல். இம்மாதிரி நிற்பதற்கு ஞானமே நேரான ஸாதனம்; ஏனெனில் ஞானம் உலகவிஷயங்களுக்கு வேர் போன்றதாகிய திரிபுடியை அழிக்கும் திறனுடையது.

இதுபற்றியே வித்யாரண்ய ஸ்வாமிகள் பஞ்சதசப்பிரகாணத்தில், 'ஞானத்திற்கு ஹேது, சிரவண மனன நிதித்யாஸனம்; ஸ்வரூபம், ஸத்அஸத்பாவனை; கார்யம், மறுபடி அகங்காரம் எழாதிருத்தல்; எல்லை, பிரஹ்மம் தான் என்ற திடம் வரும் நிலை; பலம், மோக்ஷம்,' என்றார்.

# விவேக போதினி

தொகுதி 2] ஸாதாரண௵ வைகாசிமீ [பகுதி 12


## முக்ய உபநிஷத்துக்கள்

### THE PRINCIPAL UPANISHADS

### I & II. ஈசகேன உபநிஷத்துக்கள்

### THE ISA & THE KENA

எல்லாவித புருஷார்த்தங்களைப் பார்க்கிலும் பரமாத்துமாவை உணர்ந்து தெளிவதே மிகச் சிறந்தது என்ற விஷயத்தை வற்புறுத்துவதே ஈசோபநிஷத்தின் நோக்கம். இதில் பக்குவியான சிஷ்யன் ஒருவன் ஓர் குருவை அடுத்து முடிவான பரமபதத்தைத் தரக்கூடிய ஞானம் எது என்று கேட்க, அவனுக்கு ஆசார்யன் விடை கொடுப்பதாகக் கொண்டு, முமுக்ஷுக்களுக்கு அவசியம் இருக்கவேண்டிய உணர்ச்சியை இந்த உபநிஷத்து நன்றாக எடுத்துரைக்கின்றது.* இந்த உபநிஷத்தின் விஷயம் பின்வருவது.

முமுக்ஷுவுக்கு இரண்டு மார்க்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவையாவன: ஞானமார்க்கம், கர்மமார்க்கம் ஆகிய இவைகளே. இவை இரண்டனுள் முன்னது மிகச் சிறந்தது. பிரஹ்மத்தை உணர்ந்த ஞானிகள் எல்லாவற்றையும் பிரஹ்மமாகவே பார்க்கின்றனர். எல்லா விஷய ஆசைகளையும் ஒழித்து, ஞானிகள் எல்லாம் பிரஹ்மம் என்ற நினைப்பிலேயே ஈடுபட்டிருக்கவேண்டும். பரம்பொருளை உள்ளபடி உணர்ந்து, அது மாறுதது, தேஹ (விஷய) ஸம்பந்தமற்றது, ஸர்வஜ்ஞும் பரிசுத்தமானது, எல்லாவற்றிற்கும் ஆதாரமானது, ஸ்வயம்புவானது, எல்லாவற்றிலும் இருப்பினும் அவைகளால் தடுக்கப்படாதது, மனம், இந்திரியங்கள் இவைகளுக்கு அப்பாற்பட்டது, அது எல்லாவற்றிலும் இருப்பது, அதனுள் எல்லாம் அடங்கியது என்று அறிந்து தெளிந்தால் ஒருவன் ஸகலவித புருஷார்த்தங்களையும் அடைந்தவனாவான். இதன்மேல் அவனுக்குத் துக்கம், மயக்கம் இரண்டும் ஏற்படாது.

மனம் சுத்தப்பட்டு இம்மாதிரியான சிறந்த எண்ணங்கள் அதில் குடிகொள்வது மிகக் கஷ்டம். இம்மாதிரி எண்ணங்களில் ஈடுபட்டு நிற்கத் திறனில்லாதவர்கள் வைதிக கர்மங்களைச்செய்தே தீரவேண்டும். இந்த முடிவை மூன்றுவிதமாக அடைய முயலலாம். அவையாவன: கர்மங்களை மூடமாகச் செய்தல், பரம்பொருளை (ஒருவாறு) உணர்ந்து நிற்றல், பரம்பொருளை உணர்ந்து கர்மம் செய்தல் ஆகிய இவைகளே. இம்மாதிரி பழகுவதால் மனிதன் இறந்தபின் பரமபதத்தை அடைவன். ஞானத்தை விருத்தி செய்துகொண்டே கர்மம் செய்தால் வரவர அப்பியாஸிக்குச் சிறந்த விஷயஸுகங்கள் உண்டாகும். இதனால் இவனுக்கு ஸுகங்களில் உள்ள இச்சை குறைக்கப்பட்டு முடிவில்வரும் ஞானத்தை ஏற்பதற்கும் இவன் அதிகாரியாவான். இப்படி இருப்பினும் இந்த மார்க்கம், பிரஹ்மஞானத்தை விட மிகத் தாழ்ந்ததே. ஏனெனில் பிரஹ்மஞானத்தால் உண்மை ஞானமும் ஆனந்தமும் உண்டாகும். முன்னதால் நிலையில்லாப் பலன்களே ஏற்படும்.

இனித் தளவகார உபநிஷத்து என்று கூறப்படும் கேநோபனிஷத்தை எடுத்துக்கொள்ளுவோம். இதன் முதல் மந்திரம் கேன (எதனால்) என்ற கேள்விப் பதத்தொடு தொடங்குவதால் இந்த உபநிஷத்திற்கு இப்பெயர் வந்தது. பிரஹ்மம் ஒன்றுதான் முடிவாகத்தனிக்கும்

* உபநிஷத்துக்கள் பொதுவாகக் குரு சிஷ்ய ஸம்வாதமாகவேயிருக்கும். இவைகளுக்கு முன்னர் கூறப்படும் சாந்திமந்திரமும் பொதுவாக த்விவசனத்திலேயேயிருக்கும். அதாவது குரு, சிஷ்யன் ஆகிய இருவருக்கும் சாந்தி உண்டாகட்டும் என்ற பிரார்த்தனை ரூபமாக இருக்கும்.

உண்மைப்பொருள், அது இவ்வாறு உலக ஸம்பந்தமான எண்ணங்களுக்கு அப்பாற்பட்டு வேறாக இருப்பது, என்பதை ஸ்தாபிப்பதே இதன் முக்கிய நோக்கம். இதில் சிஷ்யன் குருவை நோக்கி 'யாரால் நியமிக்கப்பட்டு மனது தன் வேலையையும், பிராணன் தன் வேலையையும், வாக்கு உச்சரிப்பு என்ற தன் வேலையையும், கண் காது முதலியவைகள் தமது தொழில்களையும் செய்கின்றன?' என்று பல கேள்விகள் கேட்கிறான். இதற்குப் பதில் கூறப்புகும் ஆசாரியன் முதலில் 'ஸகலத்தி லும் ஸம்பந்தப்பட்டதான ஆதிகாரணம் ஒன்று இருத்தல்வேண்டும். இது ஸ்வதஸித்தமாயும் ஒன்றின் காரியமாகாமலும் இருத்தல் வேண்டும்' என்ற கொள்கைகளைப் பின்பற்றியே மறு மொழி கூறுகிறார். 'காதுக்குக்காதாகியும்,கண்ணுக்குக் கண்ணாகியும் உள்ள ஓர் ஆதிகாரணப் பொருள் உண்டு. இந்த ஆதிகாரணந்தான் காது முதலிய இந்திரியங்களுக்கு அவைகள் தொழில்களை நடத்தும் சக்தியைக் கொடுப்பது. இதனால்தான் அறிவு உண்டாவது. இந்த ஆதிகாரணமாகிய உண்மையான பரம் பொருளை உள்ளபடி அறிந்தால் உடனே ஒருவனுக்கு நித்யத்வமும், பூர்ணத்வமும் வரும்.

இம்மாதிரி ஒருவாறு குறிப்பாகத்தான் பிரஹ்மத்தின் லக்ஷணத்தைக்கூற முடியும். பிரஹ்மம் மனோவாக்கெட்டா வஸ்துவாதலால் வேறு எவ்விதத்திலும் அதை விளக்க முடியாது. நமது ரிஷிகள் பிரஹ்மம் அறியப்படும் பொருளைவிட வேறாகியிருப்பதாயும், அறியக்கூடியதாகிய பொருளுக்கு அப்பாற்பட்டதாயும் உள்ளது என்று மதிக்கின்றனர். பிரஹ்மம் என்ற பரம்பொருள் வரம்புள் அடங்காததால் உலக விஷய ஸம்பந்தமாகி எண்ணங்களையே பொருளாக உடைய வாக்கால் அதை நேரிட வர்ணிக்கமுடியாது. உபநிஷத்தில் வரும் விகந்தா (அறிபடுபொருள்), அவிகந்தா (அறிபடாததாகியும், அறியக் கூடியதாகியும் உள்ள பொருள்) என்ற இரண்டு பதங்களும் வ்யக்தம் (வெளிப்படை) அவ்யக்தம் (மறைவு நிலை) என்று உலகத்தின் விஷயமாகக் கூறப்படும் இரண்டு பதங்களது பொருளை முறையே அடக்கி உள்ளவைகள். வெளிப்படையான பிரபஞ்சமானது நமது இந்திரியங்களுக்குப் புலப்படும் எல்லாக் கோளங்களுமே, இது காரியம். மறைவாகி இருப்பது இந்தத் தோற்றப் பிரபஞ்சத்திற்கு ஸூக்ஷ்மமாக இருந்து காரணமாக இருப்பது. இது எளிதில் புலப்படாதது, ஆகிலும் ஸூக்ஷ்மமாக அறியக்கூடியதே. பிரஹ்மமோ இவ்விரண்டிற்கு அப்பாற்பட்டு இவைகளுக்கும் காரணமாக இருப்பது. ஆதலால் இது இந்திரியம் முதலியவைகளால் அறியக்கூடிய வஸ்துவல்ல, ஆனால் இந்தப் பரம்பொருளாலே தான் ஸகல இந்திரியங்களும் உண்டாகிய தொழில் நடத்துகின்றன. இது இல்லாவிடில் எல்லாம் செயலற்று நிற்கும்.

ஆகவே பிரஹ்மத்தைப் பற்றிய உணர்ச்சி எல்லாம் ஸாதாரண உலகவிஷய உணர்ச்சியைப் போன்ற இந்திரியாதிகளால் நேரிட உண்டாகக்கூடியவையல்ல. பிரஹ்மம் என்ற ஓர்வஸ்து இருந்தே தீரவேண்டும். அது இத்தன்மையை உடையது என்று நேரிடவர்ணிக்கமுடியாது. நமது இந்திரியாதிகளால் ஏற்படும் அறிவு அனந்தவஸ்துவாகிய பிரஹ்மத்தைச் சென்று எட்டாது. பிரஹ்மத்தை நேரிட அறிய முடியாததால், அது அறியக் கூடியதென்றும் சொல்ல முடியாது, அதை நாம் அறியவில்லை என்றும் கூறமுடியாது. பிரஹ்மம் அறியக்கூடியது, அதாவது அது பிரபஞ்ச காரணம், மனம், முதலியன என்று வர்ணிக்கக்கூடியது என்று எண்ணுபவர் பிரஹ்மத்தை உண்மையாக உணர்ந்தவர் அல்லர். இம்மாதிரியாகப்பிரஹ்மத்தை உணர முடியாது

என்று உணர்ந்தவரே பிரஹ்மத்தை உண்மையாக உணர்ந்தவர். இதைப் பின்வருமாறு விளக்கலாம். மனிதனது புத்தியே அறியும் சக்தியை உடையது. அதனால் அறியப்படும் பொருள் அதைவிட வேறாக இருத்தல் வேண்டும். எவ்வளவு ஸூக்ஷ்மமாக மனிதன் அறிந்தபோதிலும் அங்கும் அறிபடுபொருள் அறியும் பொருளைவிட்டு வேறாகவே நிற்கும். இம்மாதிரி வேறாகநிற்கும் இருபொருள்கள் கண்ட (அளவுள் அடங்கிய) வஸ்துக்களாதல்வேண்டும். ஆகவே மனிதனால் அளவுள் அடங்கக்கூடிய அதாவது கண்ட வஸ்துக்களையே உணரமுடியும். பிரஹ்மமோ அகண்டம் (அளவுள் அடங்காதது). ஆகவே மனிதன் அறிவால் அதை உள்ளபடி அறியவே முடியாது. மனிதன் தேகதாரியாக இருந்து இந்திரியங்களில் ஈடுபட்டிருக்கும் வரையில் பிரஹ்மத்தைப் பூர்ணமாக அறிய முடியாது. இம்மாதிரியான மனிதர்கள் வரவர பிரஹ்மத்தைத் தமது அப்பியாஸ பலத்தால் அணுகலாமே ஒழிய அதை முற்றிலும் உணரமுடியாது என்பதே. 'உண்மையில் பிரஹ்மத்தை அறிய முடியாதென்று தெளிந்தவர்களே பிரஹ்மத்தை உண்மையில் உணர்ந்தவர்கள்' என்ற உபநிஷத்வாக்கியத்தின் பொருள். ஆகவே இந்திரியாதிகள் மூலமாகவே அறியும் பழக்கம் உடைய ஒருவனுக்குத் தன்புத்தியால் பிரஹ்மத்தை அறிய முடியாது என்ற உணர்ச்சியே பரமஞானமாகும். பிரஹ்மத்தை அறிவது என்பது பரஸ்பரம் விருத்தமான பதங்களை உடைய வாக்கியம். புத்தி அறியும் தொழிலை நிறுத்திவிட்டு அடங்கி நின்றால் அப்பொழுதுதான் பிரஹ்மம் உண்மையாக வெளியாகும்.

முன் எடுத்துக்காட்ட முயன்றபடி உணரும் உணர்ச்சிதான் மனிதன் அடையவேண்டிய மிகச் சிறந்த புருஷார்த்தம். பிரஹ்மத்தை வேறு எவ்வாறு உணர்ந்தபோதிலும் மனிதன் துக்கம் தொலையாது. இது ஜீவனை மறுபடியும் பிறந்து இறந்து வருந்தும்படி செய்யும். உலக வாழ்க்கையில் ஏற்படக் கூடிய துக்கங்கள் மாறாமலிருக்கும்.

முற்கூறியவைகள் முதலிரண்டு பாகங்களில் உள்ள விஷயம். இந்த உபநிஷத்தில் பின்னிரண்டு பாகங்களில் முற்கூறிய விஷயங்களை விளக்கும் ஓர் கதை காணப்படுகிறது. பிரஹ்மம் அஸுரர்களை ஜயிக்க, தேவர்களுக்குச் சிறப்பு உண்டாயிற்று. அப்பொழுது தேவர்கள் "ஜயம் நம்முடையது. இந்தச் சிறப்பு நம்முடையது" என்ற கர்வங்கொண்டு தமக்கு இவை எல்லாம் பிரஹ்மத்தினிடமிருந்து உண்டாயின என்பதை மறந்துவிட்டனர். இந்த மயக்கத்தை நீக்கப் பிரஹ்மம் அவர்கள் முன் ஓர் அற்புத உருவுடன் வந்துநின்றது. அப்பொழுதுகூட பிரஹ்மத்தின் சிறப்பு அவர்களுக்கு விளங்காமல் போக, தேவர்கள் "இந்த உருவம் வணங்கத் தக்கதோ?" என்று சங்கித்தனர். இந்த ஸமயத்தில் அவர்களிடம் வந்த அக்னியை அவர்கள் இந்த விஷயத்தின் உண்மையை உணர்ந்துவரும்படி ஏவினர். அக்னி பிரஹ்மத்தினிடம் ஓடோடியும் வந்து தனது எரிக்கும் சக்தியைப் பற்றிப் புகழ்ந்து பேசிற்று. இதைக்கேட்டதும் பிரஹ்மம் ஓர் சிறு புல்லை எதிரேவைத்து "இதை எரி பார்ப்போம்!" என்றது. அக்னி தன்னால் ஆனமட்டும் பார்த்தது. அதனால் ஒன்றும் முடியாமல் போய்விட்டது. இதன் பின்புகூட அக்னிக்குப் பிரஹ்மத்தின் சிறப்பு விளங்கவில்லை. பின்னர் தேவர்களால் வாயு அனுப்பப்பட்டுப் பிரஹ்மத்தினிடம் வந்து "நான் எல்லாவற்றையும் பஞ்சாகப் பறத்திக்கொண்டு போய்விடுவேன்" என்று பெருமை பேசிற்று. அப்பொழுது பிரஹ்மம் ஓர் சிறு புல்லை முன்பு வைத்து "எங்கே இதை அடித்துக்கொண்டுபோ பார்ப்போம்!" என்றது.

அப்பொழுது வாயுவின் சிரமமும் வீணாயிற்று. பின்னர் தேவர்கள் இந்திரனை அனுப்பினர். இந்திரன் வந்ததும் பிரஹ்மம் மறைந்தது.

பார்த்தான் இந்திரன்! ஆச்சரியம் அடைந்தான்! "இவ்வளவு அற்புத சக்தி உடைய இந்தவஸ்து என்னமாக இருக்கலாம்," என்ற எண்ணம் எழ அவன் பரவசமாகி அந்தவஸ்துவைப்பற்றியே தியானிக்கத் தொடங்கிவிட்டான். அப்பொழுது தன் மனதுள் பர்வத ராஜ குமாரியாகிய உமை ஸர்வாலங்கார பூஷிதையாகத் தோன்றுவதைக்கண்டு ஆனந்த முற்றான். அவளை நோக்கி "இப்பொழுது மறைந்துபோனது வணங்கத்தக்கது தானா?" என்று இந்திரன் கேட்டான். அதற்கு அவள், "இந்தப் பிரஹ்மம்தான் வணங்கத்தக்க பொருள். இது ஒப்பு உயர்வற்றது இந்தப் பிரஹ்மம் ஜயித்ததால்தான் உங்களுக்கு இவ்வளவு சிறப்பு ஏற்பட்டது" என்று மறுமொழி கூறினாள். உமையின் வாக்கியத்தால் இந்திரனுக்குப் பிரஹ்மஜ்ஞானம் வந்தது. தான், அக்னி, வாயுமுதலிய ஸகலதேவதைகளுக்கும் சக்திகொடுப்பது இந்தப் பரப்பிரஹ்மம்தான். இவனன்றி ஓரணுவும் அசையாது. இவன் மின்னலைப்போல அற்புதப் பிரகாசத்துடன் தோன்றிமறைதலால் இவனை இந்திரியங்கள் உணரமாட்டா. ஆதலால் மனதால் தியானம்செய்து ஒவ்வொருவனும் தன் உணர்ச்சியை விசாலப்படுத்திக்கொள்ளவேண்டும். இவ்வாறு பிரஹ்மத்தை அறிபவனே எல்லோராலும் ஆராதிக்கத் தகுந்தவன். இந்தச் சிறந்த ஞானத்தை அடைவதற்கு இந்திரிய நிரோதம், பரிசுத்த கர்மங்கள், தியானம் ஆகிய இவைகளே முக்கிய ஸாதனங்கள். அநேக சாகைகளோடு கூடிய வேதங்களே பிரஹ்மவிஷயத்தில் ஆதாரமாயிருப்பவை. ஸத்யமே பிரஹ்மத்தின் நிலைமை. இம்மாதிரி பிரஹ்மத்தை உணர்ந்தவன் பரிசுத்த கர்மம், எண்ணம் ஆகிய இவைகளால் ஸகல பாபங்களிலிருந்து விடுபட்டு மாறுப்பரம பதத்தில் நிலைபெறுவன்: இதுவே உபநிஷத்.

ஓம் தத்ஸத்.

# சிலப்பதிகாரக்கால ஆராய்ச்சி

## THE DATE OF SILAPADIKARAM

பண்டைக்காலத்துச் சிறப்புற்று விளங்கி, சேர, சோழ, பாண்டிய அரசர்களால் போற்றப்பட்டு, முதல், இடை, கடையென்னும் முச்சங்கத்தார் காலத்தும் ஓங்கிச்செழித்து வளர்ந்த அமிழ்தினுமினிய தமிழ்ப்பாஷையில், ஐம்பெருங்காப்பியங்களெனவழங்கும் ஜீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதியென்னும் பௌத்த, ஜைந நூற்கள் எக்காலத்தன, எனும் வினா சென்ற சொற்பகாலமாக ஆங்கிலங்கற்ற வித்வான்களாகிய மேனாட்டார், கீழ்நாட்டார் எனும் இருவகுப்பினருடைய மனதிடத்தும் குடிகொண்டிருக்க, இதுபரியந்தம் யாதொரு திருப்திகரமான விடையும் வெளிவந்ததாகத் தோன்றவில்லை. ஸுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னமேயே, மேனாட்டுப் பாதிரிகளில் ஒருவரும், தமிழில் மிகப்பாண்டித்தியம் அடைந்தவருமான காலஞ்சென்ற G. U. போப்பையர் (Rev. G. U. Pope) அவர்கள், முதன் முதல் தாம் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிய திருக்குறளைத் தமிழ்நாட்டார் மாத்திரமல்ல மற்றென்னாட்டாரும் ஓதிப் பயன் பெறுதல்கூடும் என்றறிந்து, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அந்நூலின் பாயிரத்தில், திருக்குறள் செய்த காலத்தை வரையறுக்கையில் பின்வருமாறு வரைந்துள்ளார்: "நம் ஆசிரியர் காலத்தைத் திண்ணமாய் வரையறுக்கப் போதுமான சாதனங்களில்லை, ஆயினும், கி. பி. 800 முதல் கி. பி. 1000க்குள் இருக்குமென வெண்ணுகிறேன்." இவருக்கு வெகு நாளைக்குப் பிறகு மற்றுமொருவித்வான், தாமியற்றிய தமிழ் (Essay on Tamil) என்னும் நூலில் "குறளாசிரியர் திருவள்ளுவ

ணர், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இவ்விரண்டின் நூலாசிரியர்கள் காலத்திற்கு முற்பட்டவர். சுமார் ஒருநூற்றாண்டிற்கு முன்னவதிருக்கவேண்டும்" என்று எழுதியுள்ளார். ஆனால் அன்னவர் தம் நூன்முகத்தில் 5-வது பக்கத்தில், "குறளாசிரியர் திருவள்ளுவர் கி. பி. இரண்டாமாண்டிலிருந்தவர். விம்மளத்தரசன் முதல் கயவாகுவின் காலத்தவர்" என்று கூறியுள்ளார்.

இது நிற்க, அகச்சாதனம், புறச்சாதனம் எனும் இரண்டினுள் முன்னையதில் நமக்கு யாவுள ? என்று சற்று ஆராய்வாம்.

1. சிலப்பதிகாரம், மணிமேகலை யெனும் இரண்டு நூற்களினின்றும், அவற்றின் ஆசிரியர்கள் ஒரேகாலத்தவர் என்பது நன்கு விளங்குகின்றது. சேரநாட்டரசன் தம்பியும் சிலப்பதிகாரத்தின் ஆசிரியருமான இளங்கோவடிகள் தம் நூலுக்கு வேண்டிய கருவிகளை மணிமேகலை யாசிரியர் மதுரைக்கூலவாணிகன் சாத்தனார் மூலமாய்ப் பெற்றார் என்பதும் தெரிந்த விஷயம்.

2. சிலப்பதிகாரக் கதாநாயகன் கோவலன், மாதவி மூலமாய்ப் பெற்ற மணிமேகலை துறவு புகுந்து பௌத்தபிக்ஷுணிக் கோலங் கொண்ட வன்மையை விவரிக்கின்றவிடத்து, ஆசிரியர் பௌத்த தர்மங்களை விவரியா நிற்கின்ற பான்மையை நோக்குங்காலத்துப் பௌத்தமதம் அக்காலத்துத் தமிழ்நாட்டில் மிகவும் தழைத்தோங்கி நின்றதாகவே யெண்ண வேண்டியிருக்கிறது.

3. அக்காலத்து, சேர, சோழ, பாண்டியவரசர்கள் முறையே, செங்குட்டுவன், கரிகாலன், நெடுஞ்செழியன் எனவும் அறிகிறோம். சிலப்பதிகாரம் உரைக்காதையில் கயவாகுவென்னும் ஓர் அரசன் இலங்கையிலிருந்து சேரநாடு வந்து, அங்குக் கண்ணகிக்குப் பத்தினிக் கடவுளெனப் பெயரிட்டு, கோயில் கட்டித் தெய்வமாக வணங்குவதைக்கண்டு, தன்னாடுசென்று அங்கும் கண்ணகிக்குக் கோயில்கள் கட்டி வணங்கி வந்ததாகவும் கூறப்படுகிறது. இனிப் பௌத்தமதம் எக்காலத்துத் தென்னாட்டில் க்ஷீணமடைய வாரம்பித்தது என்பதை, அடுத்த சஞ்சிகையிற் கூறுவாம். பல ஆதாரங்களைக் கொண்டு கி. பி. மூன்றுவதாண்டில் தலை சாய நேரிட்டதென்பதைமட்டும் இங்கு ஒப்புக்கொள்வோம்.

காலஞ்சென்ற கனகசபை பிள்ளையவர்கள் 'ஆயிரத்தெண்ணூறு வருஷங்களுக்குமுன் தமிழர்களின் நிலைமை' (The Tamils Eighteen Hundred Years Ago) என்னும் தம் நூலில் கி.பி. முதல், இரண்டாவது நூற்றாண்டுகளிலிருந்த பாண்டியவரசர்களில் ஐவர் பெயரையும் அவரவர் காலத்தையும் கூறுகிறார்.

நெடுஞ்செழியன் I., கி. பி. 50-75.
வெற்றிவேற் செழியன், கி. பி. 75-90.
நெடுஞ்செழியன் II., கி. பி. 90-128.
உக்ரப்பெருவழுதி, கி. பி. 128-140.
நன்மாறன், கி. பி. 140-150.

மேற்கூறியவற்றினின்றும் நெடுஞ்செழியன் என்னும் பெயருடைய இருவரில் எவர் நம் நூலாசிரியர் காலத்தவர் என்றறியவேண்டும். [மணிமேகலையாசிரியர் தாம் மதுரையில் கோவலன் கொலையுண்டதும், கண்ணகி மதுரையை யெரித்ததும் நேரிற் கண்டதாகவும் நமக்கு ஓர் ஆதாரமிருக்கிறது. ஆகவே நூலாசிரியர் காலமும் நூலிலுள்ள விஷயம் நடந்த காலமும் ஒன்றாகும்.] மதுரை டிஸ்டிரிக்ட் கெஜட்டீயரில் (Madura District Gazetteer, Vol. I, Page 27) "கி. பி. 50-75-அரசாண்ட நெடுஞ்செழியன் I. என்னும் பாண்டியவரசன் கோவலனை முன்பின் யோசியாமல் கொலை செய்தான் எனக் கூறப்படுகிறது," என்ற விஷயம், பின்னர் கூறும் ஆதாரத்தால் பிசகெனவே கூறப்படவேண்டும். "Ceylon by

an officer late of the Ceylon Rifles" என்னும் நூலில் கஜபாஹு எனும் இரண்டு அரசர்கள் இருந்ததாகவும், அவர்களில் முதல்வர் கி. பி. 113-ல் அரசபுரிய வாரம்பித்ததாகவும், இரண்டாமவர் கி. பி. 1127-ல் அரசு புரிந்ததாகவும் கூறப்படுகிறது. கயவாகு என்பது கஜபாஹு என்னும்வடமொழியினின்றும்வந்த தமிழ்த்திரிபேயாம். ஆகவே கயவாகு காலத்திலிருந்தபாண்டியன் இரண்டாவது நெடுஞ்செழியன் ஆகிறான். இதுவரை நாம் நூலாசிரியர் காலத்தை யொருவாறு வரையறுத்தோம். இனி நூல் எக்காலத்தில் செய்யப்பட்டது என்பதை யாராய்வோம்.

சிலப்பதிகாரத்தினின்றும் 'கண்ணகி சிலம்பையொடிக்க மாணிக்கப்பரல்கள் சிதறினதும் அரசனும் உயிர் துறந்தான்' என்று அறிகிறோம். ஆகவே நூல் கி. பி. 128-க்குப் பின்னரே யெழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் எப்பொழுது? கண்ணகி மதுரையை எரித்ததும் மேற்றிசை நோக்கி மலைநாடடைந்து அங்குச் சுவர்க்கம் புக்கதைக்கண்டிருந்தஇடையர் மூலமாய்ச் சேரன் செங்குட்டுவன் அறிந்து உடனே இளங்கோவடிகளுடன் அவ்விடம் சென்றான். சென்று அதைக்கண்டு அதிசயித்து அக்கண்ணகிக்குக் கோயில் கட்டுவிக்க ஏற்பாடு செய்யுங்கால் அங்கு வந்திருந்த மதுரைப்புலவர் சாத்தனாரை இளங்கோவடிகள் கண்டார். அவர் மூலமாய் மதுரையில் நடந்த விஷயங்களை யறிந்தார். மேலும், மணிமேகலையைத் தான் பாடிபாய்விட்டதென்று சாத்தனார் கூற, தன் எண்ணத்தைப் பூர்த்திசெய்ய முடியாது, சிலப்பதிகாரத்தைமட்டும் பாடினார் இளங்கோவடிகள், இவையெல்லாம் அதிசொற்பகாலத்திற்குள்ளாகவே யிருத்தல் வேண்டும். ஆகவே, சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கி. பி. 128-க்குமேல் கி. பி. 130-க்குள்ளாகவே யெழுதப்பட்டிருத்தல் வேண்டும் எனத் தோன்றுகிறது.

க. வி. ஸா. மணியம்.

# அழுக்காறு

## ENVY

அழுக்காறு என்பது பொறாமை; அது அழுக்கின் வழி அல்லது அழுக்குள்ள வழி என்று பொருள்படும். தாழ்ந்த, அதாவது கீழ்மைபால் பட்ட, வழி யென்றும் பொருள்படும். இவ்வழுக்காறு பிறர் நந்நிலைமையிலிருப்பதைக் கண்டு, மனம் பதைபதைத்துத் தனக்கில்லாததை ஒருவனடைந்திருப்பதா என்று கொள்ளும் தீய நினைவென்று ஒருவாறு சொல்லலாம். அயல்வீட்டார் வாழ்ந்தால், அதைக் கண்டு, கொள்ளும் வெறுப்பு, இதன் முதல் ஸ்வபாவம். அவ்வாழ்வை கெடுக்க முயல்வது இதன் செயற்கையாகும்.

ஸம்ஸாரஸாகரத்தில் தத்தளித்துச் செல்லும் ஜீவியகப்பல் உறைந்துடையும் பாறையாக இருப்பது பொறாமைதான். இப்பொறாமை மோகமுதலிய கீழ் குணங்களைப்போல் கீழ் நிலைமைபாற்பட்டது. மலத்தின் குணத்தை அரும்பச்செய்யும் குணமுடைமையாலே திருவள்ளுவர் 'அழுக்காறெனவொருபாவி' என்றார். பாபகுணத்தையே விருத்தி செய்து நல்லவற்றை எல்லாம் எரிக்கும் தன்மையுடையது.

நெருப்பிற்கு 'சேர்ந்தாரைக் கொல்லி' என்று பெயருண்டு. அது பொறாமைக்கும் பொருந்தும். தன்னை யுடையாரைக்கொல்லும் கருவி அதுதான். பிறர்பால் பொறாமை கொள்வதினால் கோபமரும்பும்; கோபமரும்ப மதிமயங்கும்; மதிமயங்க தனக்கும் தெரியாது பெருங்குற்றம் செய்யநேரும்; அக்குற்றங்களைப்பற்றிப் பின் என் செய்தோமென்று மனக்கவலையுறத் 'தன்னெஞ்சே தன்னைச்சுடும்.' அதுமாத்திரமன்று. உலகில் வாழ்வார் யாவருக்கும் உலகோடொழுகவேண்டியதவசியம். அவ்வாறு செய்யாதுவிடில் அவர் வாழ்

க்கை நிலை மிக் வருத்தமடையும். தம் ஆடை உணவு உறையுமிடம் எவையும் தன்பமின்றி அடையவேண்டுமெனின் பொறுமை யிருத்த லொல்லாது. வாழ்க்கைக்கு முதலாதாரமாகிய இவற்றை இழக்க நேரும்படிச் செய்யும்.

இது ஒருவிதம் நிற்க, பொறுமையின் மற்றோர்நிலையையும் அறியலாகும்:—அது நன்மை பாற் கொள்ளும் தீய வெண்ணம் தீய வழியுள் மனத்தைச் செலுத்தலாம். மனத்தி லெப்பொழுதும் பொறுமை குடிகொள்வதினால் எல்லாரிடத்தும் ஓர் அவநம்பிக்கை கொள்ளச்செய்யும். நல்லவர்கள்பால் பொறுமை கொண்டு அவர்க்குக் கெடுதி செய்யவேண்டுமென்று கீழினத்தாரொடு கலத்தல் பொறுமையின் முதல் வழி. பின் அக் கீழினத்தார்பால் பொறுமையின் ஸ்வபாவத்தினால் அவநம்பிக்கைகொள்ளல்; அதனால் கீழோரைத் தனக்குப் பகைவராக்கிக்கொள்ளல் அதன் பின் வழி, மேலோரைப் பகைத்துக் கொள்வினும் கொள்ளலாம்; அவர் நமக்குக் கெடுதி செய்யார்; கீழோரைப் பகைத்துக் கொள்ளல் மிகக் கேட்டையுண்டாக்கும். ஆனதினால் கீழோர் பகை பொறுமையின் மிக்க தோழனாக விளங்கும் நிலைமைக் கடைப்படியாகும். அவை இரண்டுங் கலந்து மனிதனை 'இன்மையிற் புகுத்தி விடும்.' இவற்றை யெல்லாம் எண்ணித்தான் திருவள்ளுவரும்,

" அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும் "

என்று கூறியுள்ளார்.

ஆகையால் பொறுமையுடையான் நல்லோர் அல்லார் என்னும் இரு திறத்தார்க்கும் ஆகாதவனாகிறான். பின்னவன் யாவராலும் துறக்கப்பட்டு மனநோய்க்கு ஆளாவன். பின் பித்து பிடித்தாற்போல் மயங்கி அப்பித்தால் மனவெறியுண்டாகி மதிமயங்கி தனக்கும் தெரியாது செய்யும் தொழில்கள் அவன் அழிவைத் தேடிவிடும். இது பொறுமையால் வரும் தீங்கை உணர்த்திற்று.

இவ்வாறுமுண்டோ என்னும் ஐயம் தீருமாறு முற்காலத்திலும் இக்காலத்திலுமுள்ள அநுபவ வழியால் உதாரணம் காட்டுவோம். துரியோதனன், பீமன் வலிவைப் பொறுது பல தீங்கடைந்து,

ஆற்றி னீர்விளை யாடிய நாண்முதற்
காற்றின் மைந்தனோ டெத்தனை கன்றினேன்
சாற்றி னென்வினை தானென்னை யேசுடக்
கூற்றின் வாய்ப்புகுந் தேற்கென்ன கூற்றையா!

என்றுகூறி உயிர்விட நேர்ந்தது. 'அயல் வீடு வாழ்ந்தால் ஐந்துநாள் பட்டினி' என்றாற்போல வசிட்டனிட்ட உணவால் அவன்மேல் பொறுமைகொண்டு காமதேனுவைக் கவரமுயன்ற கௌசிகன் கதையையும் எல்லாரும் அறிவர். காமவிபற்கைபால் பொறுமைபட்ட ஸுந்தோபஸுந்தர் வரலாறும் தெரிந்ததே! கற்பிற் சிறந்த அருந்ததிப்பால் பொறுமை கொண்ட லக்ஷ்மி, ஸரஸ்வதி, பார்வதி, இவர் மாங்கல்ய பிக்ஷை கேட்க நேரிட்ட கதையையும் நாம் படித்திருக்கிறோம். குந்தி மகப்பேறு அடைந்தாள் என்று கேட்ட காந்தாரித் தன் கருவைத்தாக்கிப் பெற்ற மைந்தரைக் கடையில் துறக்கவேண்டி முடிந்ததை எவரும் அறிவர். கல்விச் செருக்காற்கொண்ட பொறுமையால் புகழேந்தியைச் சிறையில்வைத்து ஒட்டக்கூத்தன் பட்டபாடும் நாமறியோமா? மதவெறியால் ஹிந்துக்களின்பேரில் பொறுமைகொண்டு கோயில் கோயிலாகக் கொள்ளை கொண்டப் பணக்குவியலைக்கண்டு மனங்கலங்கிய கஜனிமகமத் சரிதையை யார் அறியார்? மைசூர் அரசரின்மேல் பொறுமையால் எதிர்த்து மேலோங்கிய ஹைதர் சாயபுவின் வம்சம் எத்தனை நாள் இராஜ்யபாரஞ் செய்தது? குமணராஜன் மேல் தாயபாகத்தால் பொறுமை கொண்டவனைக் கொல்லும்படி ஏவிய அவன் தம்பி

Roll- 103 1199 363 R.R4 363-378

என்ன மன அமைதியை உற்றான்?—இவை முதலான காரணங்களிலிருந்து அழுக்காறு அல்லது பொறாமை இத்தகையது என்று ஒருவாறு அறியலாகும்; அதன் விசாலம் ஒழிபு இத்தகையது என்றும் ஊகிக்கலாகும்.

அழுக்காறை அழித்தற்குப் பிரபலகாரணம் ஒன்றுண்டு. அது வருமாறு:—நியாயஸ்தலங்களிலும் குற்றமுற்றும் விசாரிக்குமிடத்து 'இவன் எண்ணமித்தகையது' என்று விசாரித்துப் பின் தீர்ப்பு செய்வர். ஒவ்வோர் காரியத்திற்கும் மனத்திலுள்ள எண்ணம் நல்லது அது அல்லது என்றறியவேண்டியது அவசியம். பொறாமைகொள்வார் உள்ளத்து எண்ணம் கொடியதே என்று நாம் கூறாமலே அறியலாம். ஆதலின் மனவெண்ணத்தைக் கொடுமையுள் புகுத்தும் பொறாமையை அழிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். மேலும் ஒருவன் தமக்குத் தகாதவைசெய்திடில் அவனுக்குத் தீங்கிழைத்தல் அதிசயமன்று. ஆனதினால் அவ்வாறு செய்வதால் ஒருவற்குப் பெருமைவராது. ஒருவர் தமக்குத்துன்பஞ்செய்யினும் அவர்க்கின்பஞ்செய்தலே பெருமைக்கிடமாகும். அவ்வாறிருக்க ஒன்றும் செய்யாது நல்ல நிலையில் இருப்பார் மேல் 'அவர் அவ்வாறு இருத்தலா!' என்று எண்ணங் கொள்ளுதல் நியாயமா? அதன்பின் அவரைக் கெடுக்கமுயல்வதும் தகுமோ? ஆதலின் அழுக்காறென்னு மாற்றைக் கடந்து அறநிலத்திற் சேர்வது மனிதர் நிலைமைக்கு அமைதியை யூட்டும். இது உண்மை மொழி. இதற்கு மனன் என்னும் மந்தியை அடக்கித் தனக்கதை ஆளாக்கிக் கொள்ளவேண்டுமே அல்லாது அதன் வழிப்பட்டுத் துன்பமடைவது நமக்கியலாது.

வா. சேஷகிரி.

## விவசாய சம்பந்தமான குறிப்புகள்

### திருநெல்வேலி ஜில்லாவில் பருத்தியைச் சால் சாலாய் விதைக்கும் முறையின் அபிவிர்த்தி

### PROGRESS OF DRILL CULTIVATION OF COTTON IN TINNEVELLY DISTRICT

இம்முறையின் அனுகூலங்களைக் காட்டிய ஒரு குறிப்பு 1909-ம் வருஷத்திய விவசாயப் பஞ்சாங்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இம்முறையில் விதைத்த பயிரின் மாசூலைப்பார்த்த குடிகளுக்கு இதன் அனுகூலங்கள் தெளிவாய்த் தெரியவந்தன. பொதுவாகக் குடிகள் எப்போதும் தாங்கள் அனுஷ்டித்துவந்த பழக்கங்களில் உபயோகமுள்ள சீர்திருத்தங்களைக் கண்டவுடனே, வெகு சீக்கிரத்தில் அவைகளின் உபயோகத்தை அறிந்துகொள்ளும் புத்திக் கூர்மையுடையவர்களாயிருக்கிறார்கள்.

சென்ற வருஷத்தில் அனேக கிராமங்களில் குடிகள் விவசாய டிபார்ட்மேண்டாருடைய வேண்டுகோளின்படி விதைக்காக மறுவருஷம் விதைப்பதற்கு நல்விதையைக் கோறிப் பருத்தியைச் சால்விதைக் கருவிகொண்டு விதைத்துப் பயிரிட சம்மதித்தார்கள். அப்படி விதைத்த ஒவ்வோரிடத்திலும் அந்தப் பயிரின் மாசூலைப்பற்றித் திருப்தி அடைந்தார்களென்றே நான் நினைக்கிறேன். ஏனென்றால், சென்ற வருஷத்தில் இம்முயற்சியில் இந்த டிபார்ட்மேண்டாருடன் சேர்ந்து வேலை செய்யக் குடியானவர்களைத் தூண்டுவது கொஞ்சம் பிரயாசமாகவே யிருந்தது. இவ் வருஷத்திலோ அக்கிராமங்களிலும் அவைகளையடுத்த கிராமங்களிலுமுள்ள அநேகங் குடிகள் தங்கள் நிலங்களை இம்முறைப்படி

விதைப்பதற்காக எடுத்துக்கொள்ளும்படி தாங்களே வேண்டிக்கொள்கிறார்கள்.

என்றாலும் சென்ற வருஷத்தின் காலநிலை இம்முறையின் மேன்மையைக் காட்டுவதற்கு விசேஷமாய் ஏற்றதாயிருந்தது. அநேக விடங்களில், முக்கியமாக அந்த ஜில்லாவின் தென் பாகங்களில், விதைப்புக்கு ஏற்ற பருவம் வந்ததினங்கள் வெகு சொற்பந்தான். ஆகையால் சாதாரணமாய் செய்யப்படும் விதமாய் அதாவது கைவிதைப்பாய்—பருத்தி விதைக்கப்பட்ட அதிகமான விஸ்திரணங்களில் விதைகள் முளைக்கவே இல்லை. அப்படியிருக்க விதைக்கருவிகொண்டு அதே காலத்தில் விதைப்பான எல்லா நிலங்களிலும் பயிர் சரியானபடி முளைத்து நிலைபெற்றிருந்தது. இதற்குக் காரணம் எளிதில் வெளியாகும். விதைகள் முளைப்பதற்கு நிலத்தில் ஈரமிருக்கவேண்டியது அவசியம். ஆனால் கைவிதைப்பில் விதைத்துக் கலப்பைகொண்டு உழுது விதை மூடும்போது, அப்படி நெகிழ்வடைந்த மண்ணிலுள்ள ஈரம் வெகு சீக்கிரத்தில் காய்ந்து போகிறது. பின் மழைபெய்யாமற் போகுமானால் விதைத்த விதைகள் முளையாமலே போனாலும் போகும். விதைக்கருவிகொண்டு விதைக்கும்போது நிலத்தில் முதல் முதல் 'குண்டகா' என்னும் அலகுக் கலப்பையை ஓட்டுவதால் நிலம் சமமாகி மெதுவடைவதன்றி விதைபழுந்தும், மண் உறுதிப்படுகிறது. விதைகள் எல்லாம் ஒரே ஆழத்தில் விழுகிறது. அதனால், நிலத்தின் ஈரம் வற்றிப் போகக்கூடிய அரும்பருவமாயிருந்தால் அவசியமானால் கூடக்கொஞ்சம் ஆழத்தில் விதைகள் விழும்படி செய்யலாம். விதைத்தபின் மறுபடியும் 'குண்டகா' என்னும் கருவியை ஓட்டினால் விதைகள் சரியாய் மூடப்படுவதுமல்லாமல் விதைக்கப் பட்ட மண் சரியானபடி உறுதியடைந்து விடும். விதைத்த நிலம் இப்படி உறுதியடைந்து அதன்மேல் நுண்ணிய நெகிழ்வடைந்த மண் மூடிக்கொண்டிருந்தால், சாதாரணமாக உழுதமண் படைமுழுவதும் நெகிழ்வாயிருந்தால் எவ்வளவு சீக்கிரத்தில் அதிலிருக்கும் ஈரம் காய்ந்துபோகுமோ அவ்வளவு சீக்கிரத்தில் காய்ந்துபோகாது.



விதைக்கலப்பைகொண்டு விதைத்த நிலங்களிலெல்லாம் பயிர் சரியானபடி முளைத்ததின் காரணம் இதுதான்.

விதைக்கருவிகொண்டு விதைப்பதில் கிருஷிகர் மனதில் பதிந்த மற்றொரு அனுகூலம் என்னவெனில் அதனால் விதைப்பு வெகு சீக்கிரத்தில் நடந்து முடிவாதல். விதைக்கருவியும், குண்டகாவென்னும் அலகுக் கலப்பையும் உபயோகிக்கும்போது இரண்டு ஜதைக் கால்நடைகொண்டு ஒருநாளில் ஐந்து ஏகரா நிலத்தை விதைத்து விதைமூடலாம். ஆனால் கைவிதைப்பாய் விதைத்தால் அந்தக்கால்நடைகளைக் கொண்டு இரண்டு ஏகரா நிலந்தான் விதைக்கக்

கூடும். இந்த ஜில்லாவில் இது முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம். ஏனென்றால் அநேகவிடங்களில் பருத்தி விதைப்புக்காலமும், இவ்விராஜதானியின் இந்தப் பாகத்தில் முக்கியமான உணவுதானியமாகிய கம்புப்பயிரின் ஊடே பயிருழவு நடத்துங் காலமும் ஒன்றாயிருக்கிறது.

இந்தப்பருத்திப் பயிருண்டானபின் செய்யும் பருவங்களைப்பற்றி யோசிக்குங்கால், கால்நடைகளைப் பூட்டியோட்டும் சிறுபயிரடிக்குங் கருவிகள் அல்லது 'தந்துலு' என்னுங் கருவிகளை யுபயோகிப்பதாலுண்டாகும் அனுகூலங்களைக் கிருஷிகர் சிலாக்கியமாய் மதித்தார்கள். அக்கருவிகள் மிக்க உபயோகமுள்ளவையென்பதை எல்லாரும் தெரிந்துகொள்ளும்படியாய் அவைகளைக்கொண்டு வேலை நடத்திக்காட்டப்பட்டது. அந்த ஜில்லாவின் தென் பாகத்தில் பருத்திக்கரிசல் நிலமுள்ள பாகங்களிலெல்லாம் பருத்தி விதைத்துக் கிட்டத்தட்ட இரண்டு மாதக் காலம்வரையிலும் மழை பெய்யவில்லை. கடைசியாய் மழைபெய்தபோது நிலமானது கோடைகாலத்தின் முடிவில் இருப்பதுபோல் அதிகமாய் வறண்டுபோயிருந்தது. அப்பொழுதுங்கூட அந்த மழையில் நிலம் சரியாய் நனையவில்லை. இவ்விதமாகக் கைவிதைப்புப்பயிருக்கு அம்மழை அதிகப் பிரயோஜனமில்லாமல் போயிற்று. ஆனால் விதைக்கருவிகொண்டு விதைத்துப் பயிரிடப்பட்ட எல்லா நிலங்களிலும் வெகு சீக்கிரத்தில் பயிருழவு நடத்தி மேல் மண்ணைக் கிளறி நெகிழ்க்கக்கூடியதாயிற்று. இதனால் அதிக நாட்களுக்கு நிலத்தில் ஈரந்தங்கிச் சாதாரணகாலத்தில் பயிர்கள் எப்படி வளருமோ அப்படி வளர்ந்துவந்தன என்றாலும், சால்விதைக் கருவிகொண்டு விதைத்த நிலங்களையுடைய அநேகருக்கு இந்தப்பயிருழவு வேலை நடந்துகொண்டிருக்கும்போது அதன் உபயோகம் அவ்வளவாய்த் தெரியவில்லை. ஏனென்றால் அவர்கள் 'தந்துலு' என்னும் கருவியை ஓட்டிக்கொண்டிருந்த கூலியாட்களை அந்தக்கருவிகூடியமட்டும் ஆழமாய்ப் போகும்படி அதன் கைப்பிடியைப் பலமாய் அழுத்திப் பிடிக்கவேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டிருந்தார்கள். என்றாலும் இப்படி ஆழமாய்ப் பயிரடித்தல் முற்றிலும் அனுவசியம். இவ்வேலை செய்வதின் நோக்கம் களைகளை அப்புறப்படுத்துவதன்றி, மேல்மண்ணைக் கிளறி நெகிழவைத்துக் கீழ்மண்ணிலுள்ள ஈரம் மேல் மண்ணில் ஏறி ஆவியாய்ப் போய்விடாமல் தடுப்பதற்காகத்தான். நெகிழ்க்கப்பட்ட மேல் மண் வெகு சீக்கிரத்தில் உலர்ந்துபோவதால் அடியிலிருந்து ஈரம் மேல் மண்ணுக்கு ஏறுமலும் ஆவியாய்ப் போய்விடாமலும் காக்கிறது. ஆகையால் 'தந்துலு' என்னுங்கருவியை ஆழத்தில் போகும்படி ஓட்டுவதால் அனுகூலமில்லை, பிரதிகூல முண்டாமென்றே சொல்லவேண்டும்.

பருத்திப்பயிரைக் கலைத்தல் அனேகவிடங்களில் ஒரு நூதனப் பழக்கமாயிருக்கிறது. கிருஷிகர் தங்கள் கம்புப்பயிரைக் கலைப்பதுண்டு. ஏனென்றால் அந்தப் பயிரின் ஊடே அதிகமான இடைவெளியிருந்தால் அது நன்றாய் வளருமென்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் பருத்திப்பயிர் வளர்ச்சிக்கும் அதிகமான இடைவெளியிருக்கவேண்டுமென்பதையே அவர்கள் நிச்சயமாய் அறியவில்லை. பருத்தியானது கம்புப்பயிரைப்போல் மூடிகட்டிக் கிளைப்பதில்லையாயினும் அதன் மத்திய சாகையிலிருந்து கிளைகளுண்டாகும். அவைகளை வளரவிட்டால் ஒவ்வொரு கிளையிலும் காய்கள் பிடிக்கும். இது மட்டுமல்ல. ஒரு பயிரைக் கலைக்கும்போது வலிமையுடன் செழிப்பாய் வளர்ந்திருக்கும் செடிகளாய்ப் பார்த்து விட்டுவிட்டு, கேவலமாயிருக்கும் செடிகளைப் பிடுங்கி எறியக்கூடும். இது மிக

வும் முக்கியமான காரியம். ஏனென்றால், ஒரு பயிரானது, எவ்வளவுக்கு வலிமையுள்ளதாயும் செழிப்பாயும் வளர்ந்திருக்கிறதோ அவ்வளவுக்கு அதில் பூச்சிகள் நோய் கொடிகள் உண்டாகாமலிருக்கும். சால்விதைக் கருவி கொண்டு விதைத்தால் அந்தப்பயிரைக் களைத்தல் மிகவும் எளிது. முதல் முதல் பயிர் களைக்கும் போது சாதாரணமான வளமுள்ள நிலத்தில் ஒரு அடி அல்லது ஒன்றரை அடி தூரத்துக்கு இரண்டு மூன்று செடிகளை விட்டு வைக்கவேண்டும். சுமார் மூன்று வாரத்துக்குப்பின் இப்படி விடப்பட்ட இரண்டு மூன்று செடிகளில் எது பலமாயும் செழிப்பாயும் வளர்ந்து வருகிறதென்று தெளிவாய்த் தெரிந்துகொள்ளப் போதுமானபடி பயிர்மேல் வந்திருக்கும். அப்போது இரண்டாந்தரம் பயிர் களைத்தல் செய்ய வேண்டும். அதாவது பலமாயிருக்கும் ஒரு செடியைமட்டும் விட்டுவிட்டு மற்றவைகளைப் பிடுங்கிவிட வேண்டும். இவ்விதமாக நிலத்திலுள்ள எல்லாச் செடிகளுக்கும் அவைகள் வளர்வதற்குச் சரிசமானமான இடைவெளி ஏற்பட்டிருக்கும். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கிருஷிகர் முதல் முதல் சால்விதைக் கலப்பையை உபயோகித்துப் பருத்திப் பயிரிடத்தொடங்கியபோது, அந்தப்பயிரைக்களைக்கக் கொஞ்சமும் மனமில்லாதவர்களாயிருந்தார்கள். ஆனால் இப்போது களைத்த பருத்திப்பயிர் அதிக மேன்மையாய்ப் பலன் கொடுப்பதைப் பார்க்கப் பார்க்க இந்த ஆக்ஷேபனை மறைந்துபோகிறது. என்றாலும் மண்பாங்கு அதிக வளமுள்ளதானால் அதின் வளத்துக்குத் தக்கதாகச் செடிகளுக்கு அதிகமான இடைவெளி விடவேண்டியது அவசியமென்பதைக் கவனிக்கவேண்டியது முக்கியம். சென்ற வருஷத்தில் சால்விதைக் கருவியால் விதைத்ததில் ஒரே ஒரு நிலத்திலுண்டான பயிர்மட்டும் சரியான மாசூல் கொடுக்காமல் போயிற்று. அந்த நிலத்தில் ஆட்டுக்கிடை வைத்ததுமல்லாமல் அதிகமான சாணி எருவும் போடப்பட்டிருந்தது.

எச். சி. சாம்ப்ஸன்,

தென்பாகம் விவசாய டேப்டி டைரேக்டர்.

# சென்னை கண்ணாடித் தொழிற் கூட்டம்

## THE MADRAS GLASS WORKS Co., (Ltd.)

மயிலாப்பூரிலிருந்து ஸமுத்திரக்கரை ஓரமாக இருக்கும் பாதையின் வழியே திருவல்லிக்கேணிக்குப் போகும்போது முன்னர் ஐஸ் மெத்தை என்று கூறப்பட்ட கட்டிடத்திற்கு அருகாமையில் ஓர் புதிய கட்டிடம் காணப்படும். இந்தவிடத்தில் முன்னர் திருவல்லிக்கேணி சாக்கடைத் தண்ணீர் உபயோகப்படுத்தும் சாலை இருந்தது. இந்தப் புதிய கட்டிடத்தில்தான் கண்ணாடிக் கைத்தொழில் இப்பொழுது நடந்து வருகின்றது. இந்தவிடத்தில் நடக்கும் அத்புதத் தொழிலைப் பின்வரும் பாகத்தில் நன்கு விவரிப்போம்.

இந்தத் தொழிற்சாலையுள் பிரவேசித்ததும் தென்னண்டைபுறம் சிறு அறைகள் காணப்படும். அவைகளுள் ஒன்றில்தான் இந்தக்கூட்டம் மேல் அதிகாரி இருப்பது. அங்குதான் இந்தத் தொழிற்சாலையில் செய்யப்படும் வஸ்துக்களில் ஒவ்வொன்று மாதிரிக்காக வைக்கப்பட்டிருக்கும். அடுத்த அறையில் தான் இங்கு செய்யப்படும் வஸ்துக்களைச் சேகரித்து ஒழுங்காக வைக்கப்பட்டிருப்பது. இதில் ஒருவரையும் விடுவதில்லை. கொஞ்சம் மேற்கே சென்றால் இந்தத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய இரும்பு ஆயுதங்கள் செய்யும் கொல்லன் பட்டரை காணப்படும். அங்கிருந்து பார்த்துக்கொண்டே கிழக்கே வரும்பொழுது ஓர் பெரிய காரையால் கட்டப்பட்ட தண்ணீர் தொட்டியும் அதனுள் ஓர் தண்ணீர்க் குழாயும் காணப்படும். இதனுள் மணலைக்கொண்டு வந்து கொட்டிக் களைந்து சுத்தப்படுத்துவது. இதன் அருகாமையில் ஸுமார் 25-அடி நீளம் 12-அடி அகலம் உள்ள ஓர் காறைக்கட்டு திண்ணை இருக்கிறது. இதில்தான் களைந்த மணலை உலர்த்துவது.

தொழிற்சாலை வடகிழக்குப் புறத்தில் துத்திநாகத் தகட்டுச்சார்பு ஒன்றிறக்கப்பட்டிருக்கிறது. அதில் தான் பெரிய உலை அடுப்பு இருக்கிறது. இதில் நேரிடி கட்டையை எரித்து நெருப்பு உண்டாக்குவதில்லை. இதன் அடிப்பாகத்தில் நெருப்பு எரிகிறது. அதன்மேல் பருமனான இரும்புக் கம்பிகள்

பட்டைகளாலாகிய சல்லடைக்கண்கள் போடப்பட்டு அதன்மேல் இரண்டு குவியல் கட்டைகள் அடுக்கி இருக்கும். இக்கட்டைகளை மேலே காணப்படும் இரண்டுதொட்டிகள்மூலமாகப்போட்டு அவைகளை நன்றாக மூடிவிடுவது. இவைகளிலுள்ள கட்டைகள் எரியாது உள்ளே அவிந்துவருவதால் அவைகளிலிருந்து மரவாயு உண்டாகின்றது. இது குழாய்கள் மூலமாகக் காற்றுக் காளவாய் அடுப்புள் போகின்றது. போகும் வழியில் விசிறிச் சக்ரம்போன்ற ஏற்பாட்டால் இந்த மரவாயுவை அதிகவேகமாகப் போகவொட்டாமல் தடுக்கப்படுகின்றது. இந்த மரவாயு காளவாய் அடுப்பில் ஏற்றப்பட மஹாஜ்வாலை விட்டெரிகின்றது. இதைக் காற்றுக்குழாயுள்ளிருந்துவரும்காற்றுகளவாய் முழுவதும்பரவி அதிகஉஷ்ணப்படுத்தும்படி ஊதுகின்றது.

இனித்தொழிற்சாலையுள்ளிருக்கும் காளவாய் அடுப்பைப்பற்றி விசாரிப்போம். இது மண், கல்முதலியவைகளால் பெரிய குதிர்போலவும் அறைபோலவும் தெற்கு வடக்காகக் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு ஆறு ஜன்னல்கள் உண்டு; மூன்று கீழ்புறத்திலும், மூன்று மேல்புறத்திலும் உள்ளன. இவைகளைக் காற்று அடைப்பாய் அடைக்கும் கதவுகளும் உண்டு. இவ்வடுப்புள் தென்புறம் ஒன்றும் வடபுறம் ஒன்றுமாக மரவாயுக் குழாய்கள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளை அடைக்கவும் திறக்கவும் வேண்டிய யந்திரம் வெளியில் வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த யந்திரத்தால் ஸுமார் அரைமணிக்கு ஒருதரம் மஹா ஜ்வாலை வடக்கு நோக்கியும் தெற்குநோக்கியும் மாறித்திருப்பப்படும். இதனால் இந்த அடுப்புள்உள்ள வஸ்துவின் எல்லாப்பாகங்களிலும் உஷ்ணம் ஒரே நிலையில் மாறாதிருக்கும்.

இந்த அடுப்புள்தான் ஒவ்வொருநாளும் மாலை நேரத்தில் கண்ணாடியாக வேண்டிய வஸ்துக்களைத் தகுந்தபடி கூட்டிபோட்டு, ஜ்வாலை உண்டாக்கி ஜன்னல்களை எல்லாம் மூடி விடுவது. இவ்வஸ்துக்கள் மறுநாள் காலை 7-மணி ஸுமாருக்குத் தகதகாயமானமாகிய கண்ணாடிக் குழம்பாக உள்ளே ஆகிவிடும். காலையில் ஜன்னல்களைத் திறந்தால் உஷ்ணம் ஸஹிக்க முடியாதது போலக் காணப்படும். இதை நோக்கினால் வைதரீணி என்ற அக்னி ஆறோ என்னும்படி பயங்கரமாக இருக்கும். இதன் அருகில் வேலை செய்பவர்களுக்கு இது லக்ஷ்யமேயில்லை. உள்ளிருக்கும் கண்ணாடிக்குழம்பை பார்த்தால் கண்ணுக்குப்புலப்படாது. உற்று நோக்கினால்மேலே அசைந்தாடும் ஜ்வாலையின் பிரதிபிம்பம் அடியில் தெரிவதால் நடுவில் ஏதோ ஓர் மட்டம் தோற்றுவதாகத் தோன்றும். பக்கத்தில் வைத்திருக்குந் தண்ணீரை ஒரு கை வாரி உள்ளே இறைத்தால், இது ஆவியாக உடனே மாறும்பொழுது சிறு முத்துப்போல உருண்டையாகக் கண்ணாடிக் குழம்பின்மேல் மட்டத்தில் ஓடியாடிச் சுழலும். இதனால் கண்ணாடிக்குழம்பின் மேல் மட்டத்தைக் கண்ணாரக் காணலாம். கண்ணாடிக்குழம்புள் கண்ணாடி ஊது குழலைத்தோய்த்துத் தூக்கினால் கண்ணாடிக் குழம்பின் மட்டம் நன்றாகத் தெரியவரும்.

ஸுமார் 5-அடிநீளமுள்ள எஃகுக்குழாய்கள் இந்த அடுப்பருகில் இருபுறங்களிலும் குளிர்ந்த ஜலத்துள் தோய்க்கப்பட்டுத்தயாராக இருக்கும். இதில்கீழ்புறத்திலிருப்போர் ஸோடா ஸீஸாக்கள் செய்கின்றனர். முதலில் இவர்கள் எஃகுகுழாயால் கண்ணாடிக் குழம்பைவேண்டியஅளவு எடுத்துவெளியேகொண்டுவந்து ஓர் கவர்பாய்ந்து ரோஜன் தடவிய இரும்பின் இடைவைத்து உருட்டுகின்றார்கள். இதனால் கண்ணாடிக் குழம்பின் சிறுபாகம் எஃகுக்குழாய் நுனியில் நன்றாக ஒட்டிக்கொள்ள மற்றையபாகம் உருண்டையாகத்தொங்கும். உடனே இதைஎடுத்துமறுபுறத்தில் வாயைவைத்துஊதுவர். இதனால்கண்ணாடிக்குழம்பு உருண்டையுள் இடம் உண்டாக அது உப்பிவரும். இந்த ஸமயத்தில் உருண்டையாக்கும் ஓர் ரோஜன்தடவிய இரும்புக் குழியுள் இந்த உப்பிவரும் குழம்பை வைத்து குழாயை உருட்டி அதை உருண்டுவரும்படி செய்வர். இப்படிச் செய்கையில் உஷ்ணம் குறைந்திருப்பதாகத் தோற்றினால் அதை அப்படியே எடுத்துக்காளவாயில் காய்ச்சுவர். பின்னர் அதை எடுத்து லாகவமாகச் சுழற்றுவர். கண்ணாடிக்குழம்பு நீண்டுவரும். இந்த ஸமயத்தில் கீழேயிருக்கும் ஸீஸா அச்சுள் இதைவிட்டு அச்சைக் காலால் அமுக்க அது மூடிக்கொள்ளும். உடனே வாயால் தம்மால் இயன்றமட்டும் குழாயுள் ஊதுவர். மேலும் வாயு வேண்டுமானால் வாயு அடைக்கும் கருவியால் அதனுள் வாயுவை அடைப்பர். இப்படிச் செய்கையில் வெளியில் அச்சின் மேல் தெரியும் கண்ணாடிப்பாகம் சற்று உப்பிக்

கழுத்துப்போல் படியும். இந்த ஸமயம் பார்த்து அச்சைத்திறந்து கண்ணாடியை வெளியில் எடுத்தால் அது பழுக்கக்காய்ந்த ஸோடா ஸீஸாவாகவே இருக்கும். இதன்கழுத்து அருகில்கிட்டேஇருக்கும்தண்ணீரில் தோய்த்த கத்தியால் இழுத்துவிடுவர். எதிரே இருந்து ஓர் வேலைக்காரன் இரும்புக்கம்பியின் நுனியில்உள்ள தகுந்த இரும்புக் குவளையுள் ஸீஸாவைப் பிடிப்பான். உடனே ஓர் அசைப்பால்அந்தஸீஸாவை தண்ணீர் தடவிய இடத்தில் தொழிலாளிஉடைத்து ஸீஸா ஏந்திய குவளையைத் தான் வாங்கிக்கொண்டு அதைக் காளவாயில் காய்ச்சுவான். பின்னர் அதை வெளியேகொண்டுவந்து அருகிலிருக்கும்கண்ணாடிக் குண்டை எடுத்து அதனுள் போட்டுச் சற்றுக் காய வைப்பான். உடனே அதைவெளியில் எடுத்து அதன் கழுத்தில் கொஞ்சம் கண்ணாடிக் குழம்பைச் சுற்றிலும் பட்டையாக விடுவான். பின்னர் கழுத்து உண்டாக்கும் அச்சை எடுத்து அதனுள் ஒட்டை அடையாதிருப்பதற்காக இருக்கும் மத்தியக் கம்பியை ஸீஸா உள்விட்டுப் பக்கங்களை இறக்கிப்பிடித்துக் கொண்டு ஸீஸாவைச் சுழற்றுவான். அப்பொழுது கழுத்துப்பாகம் பட்டையாயும் குறுகலாயும்போகும். ஸீஸாவைக் கவிழ்த்துப் பார்த்து உள்ளிருக்கும் குண்டு விழாதிருந்தால் அதை அப்படியே வேலைக்காரனிடம் கொடுத்துவிடுவான். அதை அவன் வாங்கி உஷ்ண அறை ஒன்றில் மெதுவாகக் குளிர்ந்து வருதற்காகப் போட்டு விடுவான். இவைகள் எல்லாம் ஸுமார் 1½ அல்லது 2 நிமிஷத்தில் முடிந்துவிடும்.

காளவாயின்மேல்புறத்தில் கண்ணாடிஓடுகள் செய்யப்படுகின்றன. இங்கேஅச்சின் அடிப்பாகத்தில் கண்ணாடிக்குழம்பைத் தண்ணீரில் தோய்த்திருக்கும் இரும்புக்கரண்டியால் இட்டலிமா வெடுப்பதுபோல திட்டமாக எடுத்து ஓர் தொழிலாளி போடுவான். சில வேலைக்காரர்கள் தாமதிக்காது அச்சின் மேல் பாகத்தைத்திடீரென்று இறக்கிஅமுக்குவர். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் அச்சைத் தூக்கினால் உள்ளே மங்கலாபுரம் மண் ஓடுபோன்ற கண்ணாடி ஓடு தகதகாயமானமாகப் பழுத்துக்காய்ந்து காணப்படும். இதை உடனே எடுத்து உஷ்ண அறையில் போடுவர். இரண்டு நிமிஷத்திற்கு ஓர் ஓடு முடியும். இந்தப்புறத்தில்தான் கண்ணாடி வேலை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற வித்யார்த்திகள் வேலை செய்வது.

இந்த வேலைகளில் உடைந்து போகும் கண்ணாடிகள் வீணாகப் போவதில்லை. இவைகளை எல்லாம் சேர்த்துவைத்து மாலை தொழில்முடிந்து போகும் பொழுது வேலைக்காரர்கள் காளவாயுள் போட்டுவிட்டுப் போய்விடுவார்கள். இவை மறுநாள் கண்ணாடிக்குழம்பாகிவேலைக்குத்தகுந்தநிலையில் இருக்கும். மரவாயு உண்டாகும் இடத்தில் கில் எண்ணெய்போன்றகருப்பானவஸ்துஒன்று உண்டாகின்றது. இவைகள் கப்பல்களுக்குஉபயோகப்படுமாதலின் இவைகளையும் ஜாக்கிரதையாகப் பீப்பாயில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

இனி அதிக உஷ்ணமாக இருக்கும் வஸ்துக்கள் மெதுவாகக் குளிர்ந்துவர ஏற்பட்டிருக்கும் உஷ்ண அறையைப்பற்றிக் கூறுவோம். இதனுள் வஸ்துக்களை வைப்பதற்காக ஒரே ஜன்னல்தான் உண்டு இதை அடைத்துவிட்டால் இந்த உள் காற்றடைப்பாக இருக்கும். இந்த அறையுள் நல்ல ஸக்ஷமான மணல் நிறைய விரிக்கப்பட்டிருக்கிறது. இதனுள் செய்யும் வஸ்துக்கள் ஓர் புறத்தில் ஒழுங்காக வைக்கப்படும். எதிர்புறத்தில் மரவாயுக் குழாயால் உண்டாக்கப்பட்ட ஜ்வாலை அசைந்தாடி உள்ளே உஷ்ணப்படுத்திக்கொண்டிருக்கும். ஒருநாள் செய்த வஸ்துக்களை உள்ளே வைத்துவிட்டு மாலையில் போகும் பொழுது மரவாயுவை நிறுத்தி ஜ்வாலை அடங்கும்படி செய்து ஜன்னலை மூடிப்பூட்டி அதில் அன்று தேதியையும் போட்டுவிட்டு வேலைக்காரர் போய் விடுவார்கள். ஐந்துநாள் கழித்து இதைத் திறந்து குளிர்ந்திருக்கும் ஸீஸா ஓடு முதலியவைகளை எடுத்து அலம்பி சேகரிக்குமிடத்தில் கொண்டு சேர்ப்பர். இவ்வாறு செய்யாது ஸாதாரண இடங்களில் இவைகளை ஆறும்படி வைத்தால் இவைகள் ஸமமாகவும் மெதுவாகவும் எல்லாவிடங்களிலும் குளிர்ந்து வராமல் போகக் கீறல் விட்டு உடைந்துபோம். இம்மாதிரி சில உஷ்ண அறைகள் இங்கு இருக்கின்றன.

முன்னர் கூறியுள்ள ஓடு குளிர்ந்து பக்குவமானதும் அதை எடுத்து ஒருபுறத்தை மங்கும்படி செய்ய வேறோர் அறைக்குக் கொண்டு போவார்கள். அங்கே ஓர் காற்றடைக்கும் யந்திரம் வேலைசெய்து காற்றை ஓர் ஸக்ஷ மணல் நிறைந்த பாத்திரத்துள் அடைக்கும். அதிலிருந்து ஓர் குழாயுள் காற்றால் மணல் கொண்டுபோகப்பட்டு அதன் கூறிய நுனியிலிருந்து பீறிட்டுக்கொண்டு வெகு வேகமாக

வரும். இந்த பிறிட்டு வரும் மணலில் நமது விரலைப் பிடித்தால் மணலின் வேகத்தால் கையில் காயம்பட்டு இரத்தம் வரும். அருகாமையில் கண்ணாடியால் மூடப்பட்டுத் திறக்கக்கூடிய ஓர் சிறு பெட்டி சுவற்றோரமாக இருக்கும். அதில் பக்குவமான கண்ணாடி ஓடு இரண்டு மூன்றைச்சாற்றி வைத்து அவைகளின்மேல்மணல்பிறிட்டுவரும் குழாயைப்பிடிப்பார்கள். ஸுமார்கால்மணிநேரத்திற்குள் ஓட்டின்ஓர்புறம்மணலால்தேய்க்கப்பட்டுபுள்ளிவிழுந்ததுபோல மங்கலாகும். இவ்வாறு மங்கலான கண்ணாடி ஓடு செய்யப்படும். இதைக் கூரையின்மேல் போட்டால் உள்ளே வெளிச்சம் ஏராளமாகவும் இருக்கும். வெயிலும் அடிக்காது. கண்ணாடிபெட்டியிலுள்ள மணல் பெரும்பாலும் கீழேவிழும். சில பாகம் பெட்டியின்மேலுள்ள குழாய் மூலமாக உள்ளேயுள்ள காற்று வேகத்தால் வெளியே லேசான புகைபோலக் கொண்டுபோகப்படுவதைக் கட்டிடத்தின் மேல்புறம் வெளியே நோக்கில் காணலாம். ஓடு இவ்வாறு மங்கலானதும் பக்கத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் சாணைக்கல்லால் அதன் முனைகள் கூறிய பாகங்கள் மட்டமாக்கப்படும்.

காளவாய்அடுப்பில் போடப்படும் வஸ்துஇன்னது என்பதைப்பற்றி விவரிப்போம். களைந்து உலர்த்திய மணலை உள்ளே கொண்டுவந்து சல்லடையால் முதலில் சலிப்பார்கள். பருக்கைக் கற்களை அரைக்கும் யந்திரத்தில் இட்டுப் பொடி பண்ணுவார்கள். கடற் கிளிஞ்சில்களும் இவ்வாறு சுத்தம் செய்யப்பட்டு அரைக்கப்படும். ஸோடா உப்பும் இவ்வாறு பொடிபண்ணப்பட்டபின் இவைமூன்றிலும் தகுந்த நிறைகள்(இது தான் இவ்குள்ள ரஹஸ்யம்) எடுத்துக் கலக்கும் யந்திரத்தில் இட்டுக் கலக்கப்படும். வேறு சில வஸ்துக்களும் சேர்க்கப்படும்) இந்தக்கலவையைத்தான், காளவாய் அடுப்பில் இடுவது. இந்தத்தொழிற்சாலையில்சாணைக்கல், காற்றடைக்குங் கருவி, அரைக்கும் யந்திரம், கலக்கும் யந்திரம் இவைகள் நீராவி யந்திரத்தின் ஸஹாயத்தால் தொழிற்படுவன.

இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய வஸ்துக்கள் விஷயத்தைப்பற்றி நோக்குவோம். பட்டணத்திற்கு 12-மைல் தூரத்திற்குள் இருக்கும் எர்ணாவூரில் ஓர் மணற்சுரங்கம் இக்கூட்டத்தாருக்கு அகப்பட்டிருக்கிறது. அதிலிருந்து எடுக்கப்படும் அதிக இரும்பில்லாத மணல் படகுகளில் ஏற்றப்பட்டுப் பக்கிங்ஹாம் கால்வாய் மூலமாக இந்தத் தொழிற்சாலையின் பின் அருகாமையில் வந்து சேருகிறது. பட்டணத்தில் கடற் கிளிஞ்சில்களுக்கோ கேட்க வேண்டியதில்லை. ஸோடா உப்பும் வெளிதேசத்தில் இருந்து வருவது. இவைகளுக்கு வேண்டிய விறகுச் செலவுதான் மிக அதிகம். இந்தத் தொழிற்சாலை அதிகாரி சென்னை கவர்னர் துரையவர்களை அழைத்துவந்து நடக்கும் வேலைகளின் நயத்தைக் காட்டி ஏதாவது தமக்கு ஸஹாயம் செய்தால் நலமாக இருக்கும் என்றதில் அவர் பெரிய மனது செய்து ஸுமார் $\frac{3}{4}$-லக்ஷம் ரூபாய் பெறுமானவரையில் விறகு கிரமமாக இத்தொழிற்சாலைக்குக் கொடுத்துவரும்படி அவர் உத்தரவளித்தார். கவர்ன்மெண்டார் செய்த இப்பேருதவியாலேயே இந்தத் தொழிற்சாலை ஓங்கிச் செழித்து வருகின்றது.

இப்பொழுது இச்சாலையில் ஏராளமாக ஸோடா சீஸா (பெரிது சிறிது), ஓடு, வாய் அகன்ற ஜாடி, சீஸா, கண்ணாடிகள் இவைகளைச் செய்கின்றனர். இவைகளுள்:—

பெரிய ஸோடா சீஸா 144-க்கு ரூ. $13\frac{1}{2}$ விலை, வெளியூர் விலையோ ரூ 18. சிறியதன் விலை ரூ $11\frac{1}{4}$. வெளி விலை ரூ. 15. ஓடு மங்கலாக்கியது ஒன்றுக்கு ரூ. 1—12—0 வும், மங்கலாக்காததற்கு ரூ. 1—8—0 வும் விலை. வெளிவிலையோ முறையே ரூ. 4—4—0, ரூ. 3—12—0-ம் ஆம். மற்றையவைகளும் இவை போலவே மிகுந்த தாழ்ந்த விலைக்குக் கிடைக்கும்.

இங்கு 2 அல்லது $1\frac{1}{2}$-நிமிஷத்தில் செய்யப்படும் ஸோடாசீஸா ஸுமார் 450-பவுன் அழுத்தத்தை உடையாமல் தாங்குகின்றது. வெளி சீஸாக்கள் ஸுமார் 225-பவுன் அழுத்தம்தான் தாங்கும்.

இனி இக்கூட்டத்தார் எல்லாவிதக்கண்ணாடி ஸாமான்களும் செய்யவேண்டுமென்று முயல்கின்றனர். இதற்காகயந்திரங்கள்வெளியூரிலிருந்துவருகின்றன இவர்களுக்கு வேலை கற்றுக்கொடுக்கக் கண்ணாடி வேலைநிபுணர்கள் வெளியூரிலிருந்து வந்துகொண்டிருக்கின்றனர். கூடியசீக்கிரத்தில் இதைப்போல சில தொழிற்சாலைகள்இதன் அருகாமையில் ஏற்படலாம். இந்தக் கைத்தொழில் நன்றாக விருத்தியடைந்து நம் ராஜதானியிலுள்ள அநேகருக்கு ஜீவனோபாயம் உண்டாக்கி, நம் உபயோகத்திற்கு வேண்டிய கண்ணாடி ஸாமான்களைத் தந்து, நம்மைச் சிறப்பிக்க வேண்டுமென்று நாம் கடவுளைப்பிரார்த்திக்கிறோம்.

# அடங்காப்பிடாரி *

## THE SHREW

இதலி தேசத்தில் பாடுவா என்ற ஒரு பட்டணமுண்டு. அதில் பாப்டிஸ்டா என்ற ஒரு பணக்காரக் கனவானிருந்தான். அவனுக்கு இரண்டு பெண்கள் உண்டு; முறையே காதரீன், பையான்கா என்று அவர்களுக்குப் பெயர். பையான்கா இளைய பெண், மிகுந்த ரூபவதியாயும் குணவதியாயும் இருந்தாள். உலகில் எல்லா விஷயத்திலும் பூர்ண ஸுகம் உடையவர்கள் இல்லை என்பதற்கேற்ப இவ்வளவு பாக்யங்கள் அமைந்திருந்தும், ஒரு தீராக் குறை மாத்திரம் பாப்டிஸ்டாவுக்கு இருந்தது. அவன் மூத்த பெண்ணாகிய காதரீனே இந்தக் கஷ்டத்திற்குக் காரணமாக ஏற்பட்டாள். அவள் ஓர் அடங்காப்பிடாரி. வீட்டில் தகப்பன் சொல்வதைக் கேட்பதேயில்லை. அகாரணமாகச் சண்டைகளை உண்டாக்கிக்கொண்டு வீட்டை அல்லோல கல்லோலப்படுத்தி வருவாள். இதுவும் அல்லாமல் அடிக்கடித் தன் தங்கைபையான்காவிடம் அகாரணமாகக் கோபித்துக்கொண்டு அவளை ஈவு இறக்கமின்றி அடித்துவிடுவாள். அக்காள் தங்கைகளது சண்டைகளை விலக்குவதே தினம் பாப்டிஸ்டாவின் ஓயா தொழிலாகிவிட்டது. "என் கதி இவ்வாறாகிவிட்டதே! நல்ல வெள்ளை வேஷ்டி மத்தியில் ஓர் கருப்புப் புள்ளியைப்போல நமது கீர்த்தி முதலியவற்றிற்கு இந்தக் காதரீன் தடையாக ஏற்பட்டாளே!" என்று அவன் ஸதா துக்கித்துக்கொண்டிருந்தான்.

இவ்வாறிருக்கையில் பெண்கள் இருவரும் நன்றாகப் போஷிக்கப்பெற்றுத் தகுந்த பருவத்தை அடைந்தனர். உடனே பாப்டிஸ்டா துக்கம் அதிகரித்துவிட்டது. "அப்பனுக் கடங்காப்பெண் எவ்வாறு ஆமக்கனுக்கு (புருஷனுக்கு) அடங்கும்? இவளை யார் கல்யாணம் செய்துகொள்வார்கள்? பெரிய குலத்தில் பிறந்து கல்யாணமின்றிப் புருஷர்களால் நிராகரிக்கப்பட்ட நமது மூத்த பெண் வாழவேண்டும்!" என்ற ஏக்கம் பாப்டிஸ்டா மனதைக் கவர்ந்தது. இதற்குள் காலக்கிரமத்தில் கிரீமியோ, ஹார்டென்ஷியோ என்ற இரண்டு தனிகர்கள் தாங்கள் பையான்காவைக்கல்யாணம்செய்துகொள்ள விரும்புவதாகத் தெரிவித்தனர். பின்னர் இந்த விஷயத்தில் பாப்டிஸ்டாவை அடிக்கடி இவர்கள் இருவரும் தொந்திரவும் செய்யத் தொடங்கிவிட்டனர். பாப்டிஸ்டா மனம் பதைக்கத்தொடங்கிவிட்டது. ஒருநாள் பையான்காவிடம் பிரீதிகொண்ட இருவரும் பாப்டிஸ்டா வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தனர். எதிரில் பாப்டிஸ்டா, காதரீன், பையான்கா மூவரும் வருவதைக்கண்டு இவர்கள் ஸந்தோஷித்து மறுபடியும் அவர்கள் தகப்பனாரை தம் எண்ணத்திற்கு இசையும்படிவேண்டினர். அதற்குப்பாப்டிஸ்டா "என் மூத்தபெண்ணுக்குப்புருஷன் கிடைக்காதவரையில் நான் என் இளையபெண் விவாஹத்தைப்பற்றி யோசிக்கவேமாட்டேன்! என்னை வீணாக வருத்த வேண்டாம்! உங்களில் யாராவது காதரீனை மணஞ்செய்துகொள்ள விரும்பினால் அவளை இசையும்படி செய்துகொள்ளலாம்" என்று மிகவும் நொந்துகொண்டு சொன்னான். இந்த வார்த்தையே காதரீனது துர்க்குணத்தை வெளிப்படுத்தியது. அவள் தன்னைப்பற்றி இகழ்ந்து பேசியதாக எண்ணி மிகுந்த கோபங்கொண்டு வாயில் வந்தபடியெல்லாம் தகப்பனை வைதுத் தன் தங்கையையும் வெருட்டிநோக்கினாள். பையான்கா வாய்கூடத் திறக்காது மிகுந்த சாந்தமாக இருந்தாள். பார்த்தான் பாப்டிஸ்டா! என்ன செய்வான்! பையான்கா அங்கிருந்தால் வந்திருப்பவர் இருவரும் தன்னைக் கட்டாயப்படுத்துவர்; மேலும் காதரீன் கொடுமைக்கு ஆளாகி விடும்படி நேரிட்டாலும்நேரிடும். நடுத்தெருவில் இது ஊர்சிரிக்கும் நாடகமாக முடிந்துவிடும் என்று அவனுக்குத் தோற்ற பையான்காவை வீட்டிற்குப் போகும்படி கட்டளையிட்டான். தகப்பன் கட்டளையைச்சிரமேற்கொண்டு "அக்கா, இவ்வளவுகோபமாகாது" என்று மெதுவாகக்கூறிவிட்டுத்தன் படிப்பு, பாட்டுமுதலியவைகளைக் கவனிக்கப் பையான்கா போய்விட்டாள். உடனே பாப்டிஸ்டாவும் தன் இளையபெண்ணுக்குப் படிப்பு, பாட்டுஇவைகளில் இருக்கும்ஞானத்தை ஒருவாறு வந்தவர்களுக்கு எடுத்துக்கூறி அவளுக்குத்தகுந்த உபாத்தியாயர் அகப்பட்டால்கொண்டுவிடும்படி வேண்டிக்கொண்டு, தன் பெண் காதரீனுடன் வீடு நோக்கிப் போய்விட்டான். ஹார்டென்ஷியோவும்

* நமது விவேக போதினியில் தொடர்ச்சியாக வந்துகொண்டிருந்த நீலிவசீகரம் என்ற கதையை ஷேக்ஸ்பீயர் மஹா கவி கூறியவாறு கூறி, அதைப்பற்றிய குணகுண விமர்சையையும் எழுதப் புகுமிடத்தில் இங்கு அந்தக் கதையைச் சுருக்கிக் கூறுவோம்.

கிரீமியோவும் அங்கேயே கொஞ்சநாழிகை பேசிக்கொண்டிருந்தனர். இதன் முடிவில் பையான்காவுக்குத் தகுந்த உபாத்தியாயர் ஸம்பாதித்துக்கொண்டு மறுபடியும் பாப்டிஸ்டாவிடம் போகவேண்டும் என்றும், அதன் மத்தியில் காதரீனுக்குத் தகுந்த பணத்தாசை பிடித்த புருஷன் ஒருவனை ஸம்பாதித்து பையான்கா நிலையை ஸரிப்படுத்திப் பின்னர், தாம் பாப்டிஸ்டாவிடம் அவள் கல்யாண விஷயத்தை எடுக்கவேண்டும் என்றும் தீர்மானித்துக்கொண்டு தமது இருப்பிடம் சென்றனர்.

முற்கூறியவைகளை ஒளிமறைவிலிருந்து லூஸென்ஷியோ, டிரேனியோ என்ற இருவர் கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். இவர்களுள் லூஸென்ஷியோ என்பவன் பைஸா என்ற நகரத்திலிருந்த பிரபுவின்பிள்ளை. இவன்டிரோனியோ, பயான்டிலோ என்ற வேலைக்காரர்களுடன் அதிகப் படிப்புகள் படித்து சிறப்படைவதற்காக பாடுவா வந்தவன். பயாண்டிலோ கப்பலிலிருந்து ஸாமான்களை இறக்கிக்கொண்டிருந்தான். இதன் மத்தியில் லூஸென்ஷியோவும் டிரேனியோவும் ஊர்பார்க்கச் சற்று துறைமுகத்தைவிட்டு உள்ளேபுகுந்தனர் அங்குபாப்டிஸ்டா முதலிய முற்கூறியவர்கள் வருவதைக்கண்டு இவர்களிருவரும்சற்று ஒதுங்கிநின்றுநடப்பவைகளைப்பார்த்துக்கொண்டிருந்தனர். அப்பொழுதுபையான்காவின் அமைதி, கல்வித்திறன்முதலிய குணங்கள், அழகு முதலியவைகள் ஆகியஇவைகளுக்குலூஸென்ஷியோ ஈடுபட்டுவிட்டான். இவர்கள் போனதும் தனக்கு எப்படியாவது பையான்கா மனைவியாக அமைய வேண்டுமே என்ற ஏக்கம் அவனுக்கு வந்துவிட்டது. தன்யஜமானன்ஹிதத்தையே ஸதா எண்ணும் தன்மை வாய்ந்த டிரேனியோவுக்கு லூஸென்ஷியோவை உபாத்தியாயர் வேஷம் போடும்படி செய்து பையான்காவிடம் கொண்டுவிட்டு விடலாம் என்று தோன்ற அதை அவன் வெளியிட்டான். உடனே லூஸென்ஷியோவுக்கு டிரேனியோவைத் தன் ஸ்தானத்திலிருந்து பாடுவாவில் பழகும்படி செய்யலாம் என்று மேல்யோசனை தோற்றியது. அவர்கள் அப்பொழுதுதான் வந்து இறங்கியதால் அவர்களை ஒருவருக்கும் இன்னார் என்று தெரியாது. இது அவர்கள் யோசனைக்கு ஸஹாயமாக விருந்தமையால் அவர்கள் உடனே வேஷம் மாறிக்கொண்டனர். இதற்குள் பையாண்டிலோ வர அவனுக்கு லூஸென்ஷியோ தனது ஏற்பாட்டைக் கூறி டிரேனியோவைக் காரியம் முடியும் வரையில் யஜமான ஸ்தானத்தில் வைத்து நடத்தவேண்டும் என்று உத்தரவு செய்தான்.

இங்கு இப்படி இருக்க, அன்று ஹார்டென்ஸியோ வீட்டிற்கு பெட்ரூகியோ என்ற அவன் ஸ்நேஹிதன் ஒருவன் வந்தான். தன் ஸ்நேஹிதன் வீட்டுக்கதவு பூட்டி இருந்தது. இதைக்கண்டு அவன் தன் வேலைக்காரனை நோக்கி இலக்கணமாகக் கதவைத் தட்டித் தான் வந்திருப்பதாகத் தெரிவிக்கும்படி உத்தரவளித்தான். இந்தஇலக்கணமொழிவிளங்காத வேலைக்காரன் இன்னதுசெய்வதென்று விளங்காதுவிழிக்க, யஜமானன்வேலைக்காரனை அடித்தான். அவனிட்ட கூக்குரலைக்கேட்டு ஹார்டென்ஸியோ வாயில்கதவைத் திறந்து ‘கூத்தில் கோமாளிபோல்’ வந்தஸ்நேஹிதனை ஸமாதானப்படுத்தினான். இந்தப் பெட்ரூகியோ வெரோனாவைச் சேர்ந்த ஓர் பிரபு. இவன் தகப்பன் இறந்து கொஞ்சநாள்தான் ஆயிருந்தது. வீட்டைக் கவனிப்பவர்கள் ஒருவருமில்லாததால் அதற்கு ஸஹாயமாயிருப்பதற்காக ஓர் பெண்ணைக் கல்யாணம்செய்துகொள்ளத்தான் அவன் பாடுவாவுக்கு வந்தது. இவன் நல்ல குணமுடையவன். ஆனால் ஸமயத்திற்குத் தக்கபடி கோமாளிபோல நடிப்பான். இதனால் இவனைச் சிலர் கொடியவன் என்று எண்ணிவிடலாம். ஹார்டென்ஸியோவைக் கண்டதும் பெட்ரூகியோ தான்வந்த நோக்கத்தைத் தெரிவித்தான். அப்பொழுது அவன் காதரீனது அழகு, சொத்துமுதலியவைகளைஎடுத்துக்கூறி அவளது நீலித்தனத்தையும் ஒளிக்காது சொல்லிவிட்டான். இதைக்கேட்டதும் “அவள் நீலியானால் என்ன, அவளுக்கு அழகும் சொத்தும் இருக்கின்றனவல்லவா? அதுபோதும். மற்றதை நான்பார்த்துக் கொள்ளுகிறேன்! எனக்கு அவள்தான் வேண்டும்! இனி அவளைக் கல்யாணம் செய்துகொள்ளாது எனக்குத் தூக்கம் பிடிக்காது!” என்று மிகுந்த பரபரப்புடன் சொன்னான். ஹார்டென்ஸியோ எவ்வளவு தடுத்தும் அவன் கேட்கவேயில்லை. பின்னர் ஹார்டென்ஸியோகாதரீன்தங்கைபையான்காவிடம் இருந்த தனது காதலை வெளியிட்டு, தான் ஓர்உபாத்தியாயர் வேஷம் போட்டுக்கொண்டு வருவதாகவும் தன்னைப்பெட்ரூகியோ பாப்டிஸ்டாவிடம் கொண்டு சேர்த்து, அவன் இளையபெண் பையான்காவுக்கு

உபாத்தியாயர்களாக அமர்த்திவிடவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டான். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் பையான்காவை விரும்பிய க்ரீமியோ என்பவன் ஓர் உபாத்தியாயரைக்கூட்டிக்கொண்டு அங்கு வந்தான். இவன்கூட்டிக்கொண்டு வந்தவன் தன்வேலைக்காரனோடு உடைமாற்றிய லூஸென்ஷியே என்பவனே. இவன்க்ரீமியோவின் சிறப்பைப்பற்றியே பையான்காவிடம் அடிக்கடிக் கூறுவதாக வாக்களித்தான். இவர்கள் பேசிக்கொண்டு வந்ததும் ஹார்டென்ஸியோவைக் கண்டார்கள். க்ரீமியோ பையான்காவிற்குத்தக்க ஓர் உபாத்தியாயர் அகப்பட்டுவிட்டார் என்று கூறினான். தனக்கும் ஓர் பாட்டு உபாத்தியாயர் சீக்கிரத்தில் அகப்படுவார் என்று ஹார்டென்ஸியோ கூற இருவருக்கும் பையான்காவிடம் தமக்கிருக்கும் காதல்விஷயமாகச் சற்று தர்க்கம் உண்டாயிற்று. இதன் முடிவில் ஹார்டென்ஸியோ தான் காதரீனுக்கு ஓர் புருஷன் ஸம்பாதித்து விட்டதாகவும் அவன்தான் அருகிலிருக்கும் பெட்ரூகியோ என்பதாகவும்கூற, எல்லோரும் பெட்ரூகியோவை க்ஷேமம் விசாரித்துக் காதரீனது நீலித்தனத்தைப்பற்றி வெகுவாகக் கூறினர். எல்லாவற்றையும் மிகுந்த அமைதியுடன் கேட்டு வந்த பெட்ரூகியோ "பெண்கள் நீலித்தனம் எனக்கு லக்ஷ்யமில்லை. மூட்டுப்பூச்சிக்கு ஸமானம்! பெண்களது நீலித்தனம் செய்வதெல்லாம் என்விஷயத்தில் ஸூர்யனைப்பார்த்து நாய்குலைப்பது போலாகும்" என்று உறுதியான மறுமொழி கூறினான்.

இப்படி இருக்கையில் அங்கு யஜமானன் வேஷம்போட்ட டிரேனியோ வந்து சேர்ந்தான். அவன் மிகுந்த ஆடம்பரத்துடன் பாப்டிஸ்டா வீட்டை விசாரித்தான். சீக்கிரத்தில் இந்தப் பிரபுவும் பையான்காவின்மீது காதல்கொண்டு வந்ததாகத்தெரியவந்தது. ஹார்டென்ஸியோ, க்ரீமியோ இருவரும் தாங்கள் பையான்காவின்மீது காதல் கொண்டிருப்பதாகச் சற்றுத்தர்க்கம்செய்துகொண்டனர். இதன் இடையில் பெட்ரூகியோ "அடங்காப்பிடாரி என்னைச் சேர்ந்தவள்! அவளை ஒருவரும் காதலித்துத்தர்க்கம் செய்யக்கூடாது!" என்றுகூற, அவர்கள் தர்க்கம் நின்றது. முடிவில் காதரீனைக் கைப்பற்றித் தமது பையான்காவைச் சிறைமீட்டதற்காகப் பெட்ரூகியோவுக்கு மூன்று காதலர்களும் விருந்தளிப்பதாக ஏற்பாடு செய்துகொண்டு ஒவ்வொருவராகப்பாப்டிஸ்டா வீட்டிற்குப்போகத் தலைப்பட்டனர்.

பாப்டிஸ்டா வீட்டிலோ முன் அறையில் பையான்கா உட்கார்ந்து வாசித்துக்கொண்டிருந்தாள். அங்குக்காதரீன் திடீரென்று ஓடிவந்து அவள்கையை சேர்த்துப்பிடித்து, "உன்னை விரும்பி வருபவர்களுள் யாரிடம் உன் மனம்பற்றியிருக்கிறது" என்று கேட்டாள். அதற்கு அவள் உண்மையை ஒளிக்காது "இப்பொழுது வருபவர் எவரிடத்தும் என் மனம் பற்றவில்லை" என்று சொல்ல, "நீ பொய் சொல்லுகிறாய், உண்மையைக் கூறு," என்று அடிக்கடிக் காதரீன் கேட்டாள். பையான்கா மௌனமாயிருப்பதைக் கண்டு அதிகக் கோபங்கொண்டு அவள் கன்னத்தில் காதரீன் பளீரென்று அடித்தாள். இந்த ஸமயத்தில் பாப்டிஸ்டா அங்குவர அவர்கள் சண்டையை விலக்கிக் காதரீனைக்கண்டித்தான். பையான்கா தனது உள்ளை நோக்கிப் போய்விட்டாள். காதரீனும் "அவள் மௌனம் என் கோபத்தை மூட்டியது. வேறொரு ஸமயம் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றுகதறிக்கொண்டு போய்விட்டாள். பார்த்தான் பாப்டிஸ்டா! என்ன செய்வான்! "இம்மாதிரி சண்டைவிலக்குவதே நமக்குத்தொழிலாகிவிட்டது! ஈசுவரா! என்றைக்கு இந்தத்துக்கம் தீரும்?" என்றுபெருமூச்செறிந்தான்.

இந்தஸமயத்தில் க்ரீமியோ உபாத்தியாயர் வேஷத்துடன் கூடிய லூஸென்ஷியோ வுடனும், பெட்ரூகியே பாட்டு உபாத்தியாயர் வேஷத்துடன் வந்து ஹார்டென்ஸியோ வுடனும், லூஸென்ஷியோ வேஷம்பூண்ட டிரேனியோ புஸ்தகம், வீணை முதலியவைகளை ஏந்திவந்த தன் வேலைக்காரனுடனும் அங்கு வந்து சேர்ந்தார்கள். வந்ததும் முன்பின் யோசிக்காது பெட்ரூகியோ தன்காரியத்தைக்கூறப்புகுந்து காதரீனை வாயாரத்துதித்து அவளைத்தான் கைப்பற்றிக் கொள்ளுவதாகத்தெரிவித்தான். பின்னர் தான் கொண்டுவந்திருந்த பாட்டு உபாத்தியாயரைப் பாப்டிஸ்டாவிடம் ஒப்புவித்தான். க்ரீமியோவும் தான் கூட்டிக்கொண்டுவந்த உபாத்தியாயரை ஒப்புவித்தான். டிரேனியோ தான் கொண்டுவந்த புஸ்தகங்கள், வீணைகள் முதலியவைகளைப் பாப்டிஸ்டாவிடம் ஒப்புவித்துத் தனக்குப் பையான்காவிடம் இருக்கும் காதலை வெளியிட்டான். பின்னர் பெட்ரூகியோவும், டிரேனியோவும் தமது வம்சம்,

லொத்து முதலியவைகளை எடுத்துக்கூற எல்லோரும் பாப்டிஸ்டாவுக்குத் தெரிந்தவர்களாகவே போய்விட்டனர். பாப்டிஸ்டா உடனே இரண்டு உபாத்தியாயர்களையும் சென்று வேலைபார்க்கும்படி ஏவ, அவர்கள் அங்கிருந்த திரவ்யங்களை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றனர்.

இதன் மேல் பெட்ருகியோ பாப்டிஸ்டாவை நோக்கி "என் காரியம் அவஸரம். நான் அடிக்கடி என் காதலைக் காட்ட இங்கு வரமுடியாது. சீக்கிரமாகக் கார்யத்தைத் தீர்ப்போம்" என்று சொல்ல, "எனது பூஸ்திதியில் பாதியும், ரொக்கம் 75,000 ரூபாயும் காதரீனுக்கு ஸ்திரீதனமாகக்கொடுப்பேன் என்று பாப்டிஸ்டா சொன்னான். ஆனால்அவனுக்குக் காதரீன் பெட்ருகியோவைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பவேண்டுமே என்ற கவலை வந்து விட்டது. அப்பொழுது பெட்ருகியோ "அடங்காப்பிடாரிக்குத் தக்கவிடா முண்டனுக்கும் நான். எங்கள் இருவருக்கும் ஸம்பந்தம் ஏற்பட்டால் எங்கள் இருவர் கொடிய குணங்களும் சாந்தமாகும். இந்த விஷயத்தில் கவலை வேண்டாம்" என்று தேற்றினான். இந்த ஸமயத்தில் பாட்டு உபாத்தியாயர் மண்டை உடைபட்டு ஓடி வந்து காதரீன் வீணை வாசிக்குங்கால் செய்த குற்றத்தைத் திருத்தத் துணிந்த ஸமயத்தில் அவள் தன்னை வீணையால் அடித்து மண்டையை உடைத்துவிட்டதாகக் கூக்குரலிட்டுக்கொண்டுசொன்னார். இந்த ஸங்கதி கேட்டதும் "ஆ! காதரீன் மிக சுறுசுறுப்புள்ளவள்போலக்காணப்படுகின்றது; அவளிடமிருந்த காதல் அதிகரித்துவிட்டது; அவளைக்கண்டு பேச எனக்கு எப்பொழுது கிடைக்குமோ?" என்று பெருமூச்செறிந்தான் பெட்ருகியோ. இதைக்கண்டு பாப்டிஸ்டா "என் இளையபெண் உம்மை நன்கு மதிப்பாள், போம்" என்று பாட்டு உபாத்தியாயரை அனுப்பிவிட்டுப் பெட்ருகியோ இஷ்டப்படி அங்கு காதரீனை அனுப்புவதாகக் கூறி உள்ளே போய் விட்டான்.

பெட்ருகியோ தனித்துவிட்டான். அப்பொழுது காதரீன் வந்து, வைதால் பாடுவதாகவும், கோபித்தால் ஸந்முகமாக இருப்பதாகவும், பேசாது இருந்தால் குரல் குயில்போலிருக்கிறது என்று புகழ்ந்தும் கூறி, ஓடிப்போனால் மிகுந்ததிருப்தி அடைந்தவன் போலவும் நடிப்பதாகத் தீர்மானித்து விட்டான். வந்தாள் காதரீன்! பெட்ருகியோ அவளைக் கேட் என்று செல்லப்பெயரிட்டழைத்தான். அவளுக்குக் கோபம் வர வாய் ஓயாது கேட் என்ற பெயரை அமைத்து அவளைத் துதித்தான். இருவருக்கும் பிரமாத வாக்குவாதம் நடந்தது. அதில் காதரீன் காதலனை அடிக்க அவன் "ஜாக்ரதை! உன்னை மொத்திவிடுவேன்!" என்று பயமுறுத்தினான். வெருண்டுபோனாள் காதரீன். இவ்வளவு கோமாளிக் கூத்தடிப்பவன் நம்மை அடித்துவிட்டால் என்ன செய்கிறது என்ற பயம் வந்துவிட்டது. பின்னர் பெட்ருகியோ தனக்கு அவளிடம் இருக்குங்காதலைவெளியிட்டு, அவளைப்பலர் பலவித இகழ்ச்சியாகக் கூறியது பொய் என்று கடிந்து கொண்டான். முடிவில் "நான் உன்னையே கல்யாணம் செய்துகொள்வேன்! உன் இஷ்டம் எப்படியாயினும் ஸரி. உன் தகப்பனாருக்கு இது தான் இஷ்டம், மற்றைய விஷயங்கள் எல்லாம் அனுகூலம் தான். உன் தகப்பனாரிடம் வீணை ஒன்றையும் தடுத்துக்கூறாதே" என்று அழுத்தமாகவும்திருத்தமாகக்கூறினான். இதற்குள்பாப்டிஸ்டாமற்றையவர்களோடுஅங்குவந்துநடந்ததைவிசாரிக்கபெட்ருகியோ தனக்குக் காதரீன் பசுப்போலடங்கி இசைந்து விட்டாள் என்றும் கல்யாணம் முடியும்வரை அவள் முன்போலவே இருப்பாள் என்றும் முன்னதாகக் கூறிவிட்டான். காதரீன் எவ்வளவு தடுத்துக்கூறியும் ஒருவரும் அவள் வார்த்தையை நம்பவில்லை. பெட்ருகியோவும் தடபடலாக "அடுத்த ஞாயிற்றுக்கிழமையிலேயே இந்தக் கல்யாணத்தைமுடித்து விடுவோம். என் அவஸரம் உங்களுக்கு என்னதெரியும்! என்வீடு பாழாகக்கிடப்பது உங்களுக்கு என்ன தெரியும்! நான் கல்யாணத்திற்கு வேண்டியவைகளைச்சேகரித்துக்கொண்டுஞாயிற்றுக்கிழமை இங்கு தயாராக வந்துவிடுவேன். நீங்களும் கல்யாணத்திற்குத்தயாராக இருங்கள்" என்றுகூறி முன்பின் யோசிக்காது காதரீன்கையைப்பிடித்துப் பிரமாதமாகக் குலுக்கிவிட்டுகோமாளியைபோலஓடிவிட்டான். காதரீன் எவ்வளவு சொல்லியும் கேட்காது எல்லோரும் இந்தக் கல்யாணத்தை நடத்திவிடுவதாகத் தீர்மானித்தனர்.

இன்னும் வரும்.

மகாமகோபாத்யாய, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20


# குமார ஸம்பவம்

## BIRTH OF KUMARA

பண்டித நடேசசாஸ்திரியாரால் மொழிபெயர்ப்பு

(முன்தொடர்ச்சி)

33. நெற்றியிலும் பின்நடுவில் சிவந்த விழியுடன் வெகு அழகாக விளங்கிய ஈசனுருடைய மூன்றுவது கண் அவர் அக்காலத்துத் தக்கபடி தரிக்க வேண்டிய அழகான பச்சை நெற்றிப் பொட்டாக மாறிற்று.

34. ஈசனுர் தமது மேனியில் அணிந்திருந்த கட்டுசெவிகளின் உடல்கள் மட்டும் ஒவ்வொரு நகையாக மாறின அக்கட்டுசெவிகளின் மாணிக்கங்கள் அப்படியே உருமாருமல் மாணிக்கங்களாகவே விளங்கலாயின.

35. பகலிலும் தனது கிரணகாந்திகளை வெளிக்கக்கிக்கொண்டு எப்பொழுதும் இளஞ்சந்திரனுகையால் கலங்கம் என்பது ஒருபொழுது மில்லாமல் விளங்கும் சந்திரனையே தமது மகுடமாகத் தரிக்கும் ஈசனுருக்கு வேறு மகுடம் நாடுவது அனுவசியமாகவிருந்தது.

36. இவ்வாறு தமது ஆச்சரியமான மகிமையால் புகழ்பெற்ற சிங்காரங்களை உண்டாக்கும் வல்லமை அமைந்த ஈசனுர், தாம் தமது மேனியில் செய்து கொண்ட சிங்காரத்தைத் தமதுகணங்கள் கொணர்ந்த கத்தியில் தமது மேனியைப் பார்த்துக்கொள்ளலானுர்.

37. அதன்பின்பு அவர் நந்திகேசுவரர் கையைப் பற்றிக்கொண்டு புலித்தோல் போர்த்து விசாலமாக விளங்கிய தமது விருஷபத்தின் முதுகில் அது பரமபக்தியால் குனிந்து கொடுக்கக் கைலைமலையின் மேல் ஏறுவதுபோல் ஏறி பிரயாணப்படலானுர்.

38. அவரைப் பின்தொடர்ந்து தங்கள் தங்கள் வாகனங்களில் ஏறிச்சென்று எழு தாய்மார்கள் வாகனங்கள் அசையும் பொழுதெல்லாம் தங்களுடைய காது குண்டலங்கள் அசையை தங்களுடைய இயற்கையான ஒளியின் கிரணங்களால் வெகு சிவப்பாகக் காணப்பட்ட தங்கள்முகங்களால் ஆகாயத்தையே ஒரு தாமரை ஓடைபோல் விளங்கச் செய்துகொண்டு புறப்படலானுர்கள்.

39. பொன்னின் நிறம் போன்றவர்களாய் விளங்கிய அவர்களின் பின், காளி வெண்மண்டை ஓடுகளையே தமது குண்டலங்களாக் வணிந்து வந்ததானது தனதுமுன் மின்னற்கொடி விழுந்து பின்னர் கொக்குக்கூட்டம் பறக்கக் காணப்படும் கார் மேகம்போல் விளங்கிற்று.

40. சிவபெருமான் முன்பாகச் சென்றுகொண்டிருந்த அவருடைய பிரமதகணங்கள் கோஷித்த வாத்தியங்கள் தங்கள் தங்கள் விமானங்களில் வந்து காத்துக்கொண்டிருந்த தேவர்களுக்கு அவ்விமானங்களில் இக்கோஷம் மோதிய காரணத்தால் ஈசனுரைத் தர்சனம் செய்யக் காலம் இதுஎன்று தெரிவிக்கலாயின.

### தேவர்கள் ஈசனுரைச் சேவித்தல்.

41. விசுவகர்மாவால் புதிதாகப் பண்ணப்பட்ட ஓர் குடையை ஆயிரம் கிரணங்களமைந்த சூரிய பகவான் ஈசனுர் தலைக்குமேல் பிடிக்கலானுர். அக்குடையிலிருந்து தொங்கின வெண்பட்டு முனைகள் ஈசனுர் தலைக்குச்சமீபத்திலிருந்தமையால் அவர் தலையில் விழும் கங்கைபோலும் விளங்கிற்று.

42. அச்சமயத்தில் கங்கையும் யமுனையும் ஸமுத்திரத்தை நோக்கிச் செல்லும் தங்கள் நடையைவிட்டு அன்னநடை நடந்துகொண்டு கைகளில் சாமரம்பற்றி ஈசனுருக்குச் சாமரம்போடலானுர்கள்.

43. ஈசனுர் முன்பாகப் பிரமதேவரும் விஷ்ணுவும் வெற்றியுண்டாவதாக வென்று சொல்லிக்கொண்டு அவிஸினல் அக்கினியை வளர்ப்பதுபோல் ஈசனுர் மகிமையைப் பெருகச்செய்து கொண்டு செல்லலானுர்கள்.

44. பரமாத்ம ஸ்வரூபியாகிய ஈசனுரே தமது ஒரே உருவத்தை மூவ்வுருவாகப் பிரித்துக்கொண்டாரன்றே! தோற்றத்தால் மும்மூர்த்திகளேயன்றி உண்மையாக அவ்வாறன்று; ஆகையாற்றுன் இம் மும்மூர்த்திகளுள் முதல் மூர்த்தி, கடைமூர்த்தி என்பது கிடையாது. சில சமயத்தில் விஷ்ணுவுக்குச் சிவன் முன் என்றும், சிவனுக்கு விஷ்ணு முன் என்றும், அவ்விருவர்களுக்கும் பிரமன் முதல்வர் என்றும், அவ்விருவர்களும் பிரமதேவருக்கு முன் என்றும் தெரியாத்தனத்தால் சொல்லிக்கொள்ளுவது வழக்கம்.

45. இந்திரன் முதலிய லோகபாலர்கள் தங்கள் பதவிக்கு அமைந்திருக்கும் கர்வங்களைவிட்டு வெகு

வணக்கத்துடன்வந்து நந்திகேசுவரரிடம் தங்களுக்குச்சிவபெருமானின் சேவைகிடைக்கவேண்டும் என்று முதல் முதல் வேண்டிக்கொண்டு அப்படியே அந்த நந்திகேசுவரர் 'இதோ இந்திரர் நமஸ்கரிக்கின்றார், இதோ சந்திரர்' என்று ஒவ்வொருவருக்கும் தர்சனம் காட்ட அவர்கள் வணங்கிக் கைகூப்பிக்கொண்டு நிற்கலானார்கள்.

46. பிரமதேவரைப்பார்த்துத் தமது தலையை அசைத்ததாலும், விஷ்ணுவிடம் பேசியதாலும், இந்திரனைப் பார்த்துப் புன்னகை செய்ததாலும், மற்ற தேவர்களை எல்லாம் கண்ணை எடுத்து ஸந்தோஷமாகப் பார்த்ததாலும் ஈசனார் அவரவர்களை அவரவர்களுக்கேற்றபடி மரியாதை செய்யலானார்.

47. ஈசனார் முன்பாக ஸப்தரிஷிகளும் வந்து நின்று வெற்றி உண்டாகக்கடவது என்று ஆசீர்வாத ரூபமாகச் சொல்லலானார்கள். அவர்களை ஈசனார் புன்சிரிப்புடன் பார்த்து "இப்பொழுது நடக்கப்போகும் இக்கலியாணச் சடங்கில் உங்களை நான் ஏற்கனவே ரித்துவிக்குகளாக வரித்திருக்கின்றேன் அல்லவா" என்று சொன்னார்.

48. விசுவாவஸு முதலான தேவபாடகர்கள் ஈசனார் முப்புரத்தை எரித்த பாட்டுக்களை தங்கள் பெயர்பெற்ற வீணைகளில்பாட அஞ்ஞான இருளால் ஒருபோதும் அடையமுடியாத சந்திரசேகரக்கடவுள் வழியைக் கடக்கலானார்.

49. பொன்மணிகள் ஒலிக்க கொம்பில் பற்றிய சேறுபோல் கார் மேகம் விளங்க அவ்விருஷபம் சிவபெருமானைத் தமது முதுகில் வகித்துக்கொண்டு ஆகாயத்தில் அழகாய் நடந்து தமது கொம்புகளை அடிக்கடி அசக்கிக்கொண்டு சென்றது.

50. அவ்விருஷபம் இதுவரையில் ஒரு சத்துரு வாலும் தடைபடாதபடி ஹிமவானால் பாதுகாக்கப்பட்டிருந்த அவ்வோஷதி பிரஸ்த நகரத்துக்கு ஒரு முகூர்த்தத்துக்குள் சிவபெருமானைக்காணவேண்டி ஆவலுடன் காத்திருந்த ஜனங்களுடைய பார்வைகளாகிற பொன்னின் கயிறுகளால் இழுக்கப்பட்டதுபோல் வந்துசேர்ந்தது.

51. அவ்வோஷதி பிரஸ்தத்துக்குச் சமீபத்தில் கார்மேகம்போல் கருத்த கழுத்தையுடைய ஈசனார் நகரத்தார்கள் எல்லோரும் ஆவலுடன் தம்மை எதிர் பார்த்து நிற்க ஆகாயத்திலிருந்து இறங்கி பூமியின் மேல் வந்து நிற்கலானார்.

52. சிவபெருமான் வரவால் உடல் பூரித்துப் போயிருந்த மலை மன்னவரான இமவான் யானை மந்தைகள் போன்ற தமது பந்துக்களால் சூழப்பட்டவராய் அப்பந்துக்களின் உயர்ந்த ஆடை ஆபரணங்கள் சோபிக்க நன்றாகப் பூத்து பிரகாசித்துக் கொண்டிருந்த தமது தாழ்வரையாலேயே அக்கடவுளை எதிர்கொண்டு சென்று உபசரிக்கலானார்.

53. கோட்டைவாயிற் கதவு விரிவாகத்திறக்கப்பட்டு விளங்கிய அந்நகரத்துக்குள் தேவகணங்களும் இமவானுடைய கணங்களும் தங்கள் தங்கள் வாத்திய கோஷங்கள் வெகுதூரம் கேட்க ஒரே கரை உடைந்ததும் இரண்டு வெள்ளங்களும் ஒன்று சேருவதுபோல சந்திக்கலானார்கள்.

54. மூவுலகங்களும் வணங்கப் பெற்றவரான சிவபெருமான் தம்மை வணங்கியதும் இமவான் வெட்கமடைந்தார். ஈசனார் ஊர வரும்பொழுதே அவருடைய மகிமையால் தமது தலை ஏற்கனவே வணங்கியதை அவர் அறியவில்லை.

55. அவ்விமவான் சந்தோஷத்தால் தமது முகம் மலர்ந்துவிளங்க தமது மாப்பிள்ளையின் முன்பாக நடந்து சென்றுகொண்டு கணைக்கால் பதியும்படி மலர் இறைக்கப்பட்டிருந்த கடைத்தெருவுகளுடன் சோபித்துக்கொண்டிருந்த தமது வைபவத்துடன்கூடிய நகரத்துக்குள் சிவபெருமானை அழைத்துப்போனார்.

56. அவ்வண்ணம் சிவபெருமான் பட்டிணத்துக்குள் வந்துகொண்டிருந்தபொழுது அவரைப் பார்க்க வெகுஆவலுடனிருந்த அந்நகரத்துமாதர்கள் தங்கள் மாளிகைகளின் மேற்புறத்தில் நின்றுகொண்டு வேறு ஒருவித காரியத்திலும் கவனமில்லாதவர்களாய் பின்வருமாறு காணலானார்கள்.

57. சிவபெருமானைப்பார்க்க அவசியமாய் ஓடிவந்துகொண்டிருந்த ஒருமடந்தை ஓடிவந்த அவஸரத்தால் தனது மலர்முடித்த கூந்தல்முடி அவிழ அதை மறுபடியும் முடிந்துகொள்ள யோசிக்காமல் அதைக் கையால் பற்றிக்கொண்டே வந்து சேர்ந்தாள்.

58. மற்றொரு மடந்தை தமது கால சிங்காரிப்பதற்காகத்தாதி ஒருவன்பிடித்துக்கொண்டிருக்கையிலேயே சிவபெருமான் ஊர்வலம் வரும் வாத்தியம் கேட்டபடியால் அக்காலை வெடுக்கென்று இழுத்துக்

கொண்டு அந்தி காயாமல் ஈரமாயிருக்கையிலேயே தமது அழகான நடையை விட்டுவிட்டுத் தமது ஈரக் கால் சுவடு பூமியில் பட ஜன்னல் வரையில் தாவித் தாவிச் செல்லலானாள்.

59. ஒரு மடந்தை தனது வலது கண்ணுக்கு மட்டும் மையிட்டு அம்மையை இடது கண்ணுக்கு இடலாவகாசமில்லாமல்மையிடும் ஈருக்கை கைப்பற்றிய படியே ஜன்னல் வரையில் ஓடினாள்.

60. மற்றொரு மடந்தை ஜன்னல் வழியாய் தனது கண்களைச்செலுத்திப்பார்த்துக்கொண்டிருந்தாளேயன்றித் தான் அச்சன்னலண்டை வரும்பொழுது அவிழ்ந்த தனது ஆடையின் இக்கு முடிப்பைக்கட்டிக்கொள்ளவில்லை. ஆனால் அம்முடிப்பை தனது நகையணிந்த கையால்பற்றி அந்நகையின் காந்தி உந்தியைச்சுற்றிப் பிரகாசிக்க நிற்கலானாள்.

61. ஒருவள் தான் தனது கட்டைவிரலில் ஒரு கயிற்றைக்கட்டி அதில் மலர்களை ஒட்டியாணத்துக்காகச் சேர்த்துக்கொண்டிருந்த பொழுது வெகு வேகமாய் அப்படியே எடுத்துவந்தவளாகையால் அத்தடையால் அடிக்கடி அவள் கால் வழுவ அவ்விரலில் கட்டிய கயிறுமட்டும் மிகுந்து நிற்கின்றவளாய் அவ்வேடிக்கையைப் பார்க்கலானாள்.

62. மதுவுண்ட காரணத்தால் அம்மணம்வீச கருவிழி சுழல் விளங்கிய அம்மடந்தைகளுடைய முகங்கள் அவ்வேடிக்கையைப் பார்த்துநின்ற காட்சி அந்நகரத்து ஜன்னல்கள் எல்லாம்வண்டுகள் அசைந்திருக்கப்பெற்ற தாமரை மலர்களால் சிங்காரிக்கப் பட்டனபோல காணலாயிற்று.

63. அவ்வாறு எல்லாரும் தம்மைப் பார்த்துநிற்க சந்திரசேகரர்பகலிலும் அந்நகரத்துவெண்மாளிகைகளில் தமது சந்திரகாந்தி விழுந்ததால் இருமடங்கு வெண்மையாக விளங்கச்செய்துகொண்டு எங்கும் தோரணங்கள்மேலெடுத்துக்கட்டப்பட்டுப்பிரகாசித்துக்கொண்டிருந்த ராஜவீதியை அடைந்தார்.

64. பார்க்கவேண்டியவர் ஒருவரே என்றிருந்த அவ்வீசனுரைக்கண்களால் குடித்துக்கொண்டிருந்த அந்நகரத்து மடந்தைகள் வேறு ஒரு தொழிலையும் கவனிக்காதவர்களாய் நிற்கலானார்கள். மற்ற புலன்கள் செய்யவேண்டிய பலவிதத்தொழில்கள் அக்காலத்தில் அவர்களுடையபார்வையிலேயே புகுந்திருந்தன என்றே சொல்லவேண்டும்.

65. வெகு மெல்லிய மேனியை உடைய பார்வதி ஒருவராலும் செய்து முடிக்கவொண்ணாத தவத்தை இவர் நிமித்தம் செய்தது நியாயமே. எந்த மடந்தை இவருக்குப்பணிவிடை செய்யும் பதவியை அடைகின்றாளோ அவள் பாக்யமே பாக்யம். இவர் மடியிற் றூங்கும் பதவி பெற்றவளுடைய பாக்யத்துக்குச் சொல்லவும் வேண்டுமோ.

66. ஒருவர் மற்றொருவரைக் கண்டு மோகிக்கும் அழகமைந்த இவ்விரு உருவத்தையும் விதி சேர்த்து வைக்காமலிருக்குமாயின் பிரமதேவர் இவ்விரு உருவங்களையும் உண்டுபண்ணுவதற்காகத் தான் பட்ட சிரமமெல்லாம் வீணாகப் போயிருக்குமன்றோ.

67. சிவபெருமான் ஏதோ கோபம் கொண்டு மன்மதனைக் கொளுத்தினார் என்பது பொய். மன்மதன் இச்சிவபெருமானுடைய அழகான சரீரத்தைப் பார்த்ததும் வெட்கித் தனக்குத் தானாகவே தனது தேகத்தைத் தானே விட்டிருக்கவேண்டும் என்பது திண்ணம்.

68. தோழி! நமது மலைகளின் மன்னவர் பூமியை வகிப்பதால் ஏற்கனவே உயர்ந்து விளங்கும் தமது முடியைத் தாம் கருதியவாறு இவ்வீசவருடைய சம்மந்தம் தமக்குக் கிடைத்துவிட்டபடியால் இன்னும் அதிக உயர்ந்ததாக வைத்துக்கொள்ளப்போகின்றார்.

69. இவ்விதமாய் அவ்வோஷதிபிரஸ்த நகரத்துப் பெண்கள் காதுகளுக்கு இனிமையாகப் பேசிக்கொண்டிருந்த பலகதைகளை முக்கண்ணன் கேட்டுக்கொண்டே சென்று இமவான் மாளிகைக்குள் தமது கைவளையல்களால் பொடியாகச் செய்யப்பட்ட பொறிகள் தம்மைச் சூழ்ந்துவிழ புகுந்தார்.

70. அவ்விமவான் மாளிகையில் விஷ்ணுபகவான் தமக்குக் கை கொடுக்கத் தமது விருஷபத்தை விட்டுச் சரத்கால வெண்மேகத்யைதவிட்டுச் சூரியபகவான் கீழே யிறங்குவதுபோல இறங்கி தம் முன் பிரமதேவர் வழிகாட்ட இமவான் மாளிகைக்குள் நுழைந்தார்.

71. அச்சிவ பெருமானை இந்திரன் முதலான தேவர்களும் ஸனகர் முதலான மகரிஷிகளும் கணங்களும் ஸப்தரிஷிகளை முன்னிட்டுக்கொண்டு பின்தொடர்ந்து இமவான் மாளிகைக்குள் பெரும் பிரயோஜனங்கள் சிலாக்கியமான ஆரம்பத்தைத் தொடர்வனபோல் சென்றார்கள்.

72. இமவானுடைய மாளிகைக்குள் ஈசனார் ஓர் ஆஸனத்தில் உட்கார்ந்து விதிப்பிரகாரம் இரத்தனத்துடன் தமக்குக் கொடுக்கப்பட்ட அர்க்கியம், மதுவர்க்கம், ததி, புது வெண்பட்டு முதலியவைகள் இமவான் தமக்குக் கொடுக்க மந்திரத்துடனே பெற்றுக்கொள்ளலானார்.

73. அதன்பிறகு அச்சிவபெருமான் வெண்பட்டாடை அணிந்துநிற்க அவரை அரண்மனை வேலையில் பயிற்சியடைந்தவர்கள் வெகு வணக்கத்துடன் மணப்பெண் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் புதிதாய்த்தோன்றும்சந்திரகிரணங்கள் வெண்நுரை பொங்கி விளங்கும் கடல்நீரைகடற்கரைக்கு அழைத்துப் போவதுபோல அழைத்துப் போனார்கள்.

74. தமது முகமே காந்தியுடன் விளங்கும் சந்திரனாகக் காணப்பட்ட அவ்வுமைபால் சிவபெருமான் சாத்காலத்தால் உலகம் அழகாக விளங்குவதுபோல தமது கண்களாகின்ற ஆம்பல் மலர்கள் நன்றாக மலரப்பெற்றவராகவும் தமது உள்ளமாகின்ற நீர்தெளியப் பெற்றவராயும் மாறி நின்றார்.

75. அவ்விரு மணமக்களுடைய கண்கள் தற்செயலாக ஸந்தித்துத் திகைத்துக் கொஞ்சகாலம் அப்படியே நின்று பிறகு திருப்பப்பட்டு ஒன்றைமற்றொன்று பார்க்க ஆசையுடன் அமைந்தவைகளாகவிருந்தும் வெட்கத்தால் தசையப்பட்டவைகளாய் விளங்கின.

76. மலை மன்னவரால் எடுத்துக்கொடுக்கப்பட்டதும் ஈசனைக்கண்டு பயந்து உமையின் தேகத்தில் பதுங்கியிருந்த மன்மதனுடைய முதல் முளைபோல் விளங்குகின்றதுமான பார்வதியின் கையினுடைய சிவந்த விரலைச் சிவபெருமான் தமது கரத்தால் பற்றலானார்.

77. உமைக்கு மயிர்க்கூச்சும் சிவபெருமானுக்கு விரலில் வியர்வையும் அத்தருணத்தில் உண்டானதானது அவ்விருவர்களும் தங்கள் கைகளைப் பற்றிக்கொண்டபொழுது அவ்விருவர்களிடமும் மன்மதன் ஒரே விதமாகத் தனது வல்லமையைக் காட்டினான் என்று சொல்லவேண்டியதாயிருந்தது.

78. எக்காரணத்தால் உலகமெங்கும் வதுவர்கள் மேலான சோபையைக் கலியாணப்பந்தலில் அடைந்து விளங்குகின்றார்களோ அவ்விருவர்களுடைய கலியாண சோபையைப்பற்றி நாம் சொல்லவும் வேண்டுமோ! ஒவ்வொரு கலியாணப்பந்தலிலும் உமையும் சிவனும் கலியாணப் பெண்ணிடமும் கலியாண மகனிடமும் முறையே புகுந்திருக்கின்றனர்கள் என்பது சாஸ்திரம்.

79. ஓங்கி எரிந்து கொண்டிருந்த ஓமத்தீயை அவ்விருவர்களும் வலம் வந்தபொழுது மேருவின் தாழ்வரையை இடைவிடாது சுற்றும் பகலும் இரவும்போல் அவர்கள் பிரகாசிக்கலானார்கள்.

80. ஒருவரை மற்றொருவர் கைப்பற்றிய ஆநந்தத்தால் கண்கள் மூடிய அந்தத் தம்பதியைப் புரோகிதர் மூன்று தடவை ஓமத்தீயை வலம் வரச் செய்து கொழுந்து விட்டெரியும் அத்தீயில் மணமாதின் கையால் பொறியை ஓமம் பண்ணச் செய்வித்தார்.

81. புரோகிதருடைய கட்டளைப்படி பார்வதி நன்றாக மணம் வீசிய அப்பொரிப்புகையை முகத்தில் படும்படி வாசனை பிடித்தபொழுது அப்புகையின் திரள் அவ்வம்மணியின் கன்னங்களில் பரவ அது கொஞ்சநேரம் அவ்வம்மணியின் காது நகைபோல விளங்கிற்று.

82. மணச்சடங்கு என்ற பார்வதி அவ்வண்ணம் புகைபிடித்தபொழுது அவள் முகம், அவள் கன்னங்கள் வியர்த்தும், சிவந்தும், அவள் கண்களிலிட்ட மையின் காந்திகரைந்தும், அவள் காதுகளில் அணிந்திருந்த காற்றுகள் வாடியும் கொஞ்சம் மாறி பிரகாசிக்கலாயிற்று.

83. அதன் பிறகு புரோகிதர் பார்வதியைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:—குழந்தாய், இந்த அக்கினிதான் உனக்கும் சிவபெருமானுக்கும் நடந்த விவாகத்துக்குச் சாட்சி தேவதை. இனி நீ உனது கணவராகிய சிவபெருமானுடன்கூட நின்று ஓர்வித விசாரமின்றி உனது தர்மங்களை நடத்தக்கடவாயாக."

84. பவானிதேவியும் அவ்வாறு குருசொன்ன புத்திமதியைத் தனது காதுகளைக் கண்கள்வரையில் விசாலமாகச் செய்துகொண்டு கோடையால் நன்றாக வறண்டிருக்கும் பூமி மேகத்தினின்று பொழியும் முதல் மழையைக் குடிப்பதுபோல் கேட்கலானள்.

85. எப்பொழுதும் தனது கண்களுக்கு அழகாக விளங்குகிறவரும் என்றென்றைக்கும் தனக்குக்கணவருமான சிவபெருமானால் துருவ நட்சத்திரத்தைப் பார் என்று ஏவப்பட்டதும் பார்வதி தனது முகத்தை

மேல்தூக்கிப்பார்த்து வெட்கத்தால் கொஞ்சம் வாய் குழற "பார்த்தேன்" என்று மெதுவாக மறுமொழி சொன்னாள்.

86. இவ்வாறு கலியாணச் சடங்கை நன்றாக அறிந்த புரோகிதரால் பாணிக்கிரகணம் செய்து வைக்கப்பட்ட உலகத்துக்கே தாய் தந்தைகளான உமாமகேசுவரர்கள் பத்மாசனத்தில் வீற்றிருந்த பிரம தேவரை நமஸ்காரம் பண்ணினார்கள்.

87. பிரமதேவர் அப்பொழுது உமையைப்பார்த்துச் "சுபங்கள் நிரம்பியமாதுமாணிக்கமே, வீரனுகிய குழந்தையை நீபுத்திரனாக அடையக்கடவாய்!" என்று ஆசிர்வாதம் பண்ணலானார். அதே பிரமதேவர் தாம் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் நாயகனை விருந்தும் ஈசனுல் விரும்பத்தக்கது ஒன்றுமில்லை என்று ஏற்கனவே அறிந்துணர்ந்தவராகையால் அவரை உத்தேசித்து ஒன்றும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டார்.

88. அவ்விரு மணமக்களும் பிரமதேவரை நமஸ்காரம் செய்தபின்பு புஷ்பம் முதலியவைகள் அழகாகப் பரப்பி விளங்கிய சூடாமணியின்மேல் பொன்னாலாகிய ஆசனத்தில் வீற்றிருந்துகொண்டு உலகத்தில் * எல்லாருக்கும் நடக்கும் மங்கலாக்ஷதை தலைமேல் பெறுதல் என்றதை அடைந்தார்கள்.

89. அப்பொழுது அவ்விருவர்களுக்கும் பூமாது தமது கையால் ஒருதாமரைத் தண்டை இலையுடன் பற்றி அவ்விலையின் ஓரங்களில் தத்தளிக்கும் ஜலத்திவலைகளே நல்முத்து சரங்களாக விளங்க, அத்தாமரைத்தண்டே குடைக்கம்பாக, அவ்விலையே குடையாகக் குடைபிடிக்கலானாள்.

90. ஸரஸ்வதிதேவி அப்பொழுது அவ்விருவர்களையும் இருவித வாக்கால் ஸ்தோத்திரம் பண்ணலானாள்.—வெகு பரிசுத்தமான வாக்காகிய ஸம்ஸ்கிருதத்தால் ஈசனையும் வெகு சுலபமாய் அர்த்தமாகும் பிராகிருத பாஷையால் உமையையும் தோத்திரம் பண்ணலானாள்.

91. அதன்பிறகு அவ்விருவர்களும் ஒரு முகூர்த்தகாலம் ஊர்வசி முதலிய தேவ மாதுகள் ஆடிய நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

* உலகவழக்கத்தை மனத்தால்கூட நாம் தடுக்கலாகாது என்பதுவிதி. ஆனதுபற்றி உலக தந்தைகளே அக்ஷதைவாங்கிக் கொள்ளலானார்கள்.

ஏன் என்பதற்கு மூல கிரந்தத்தைப் பார்க்க.

92. அந்நாடகம் முடிந்ததும் மண மனைவியுடன் வீற்றிருந்த சிவபெருமான் தாட்களில் இந்திரன் முதலான தேவர்கள் தங்கள் கிரீடங்களில் கைகூப்பி விழுந்து பார்வதி தேவியின் விவாகத்துடன் மன்மதனுடைய சாபம் நீக்கி அவனுக்குத் தனது மேனி வந்துவிட்டபடியால் அவன் பணிவிடையை ஒப்புக் கொள்ளவேண்டும் என்று யாசிக்கலானார்கள்.

93. அப்பொழுது பகவானும் கொஞ்சமேனும் கோபமென்பது இல்லாமல் அப்படியே என்று ஒப்புக்கொண்டு அம்மன்மதன் தன்மேலும் தனது பாணங்களைவிட விடைகொடுத்தார். காரியத்தை நன்றாக அறிந்த புத்திமான்கள் காலமறிந்து செய்யும் விண்ணப்பம் எப்பொழுதும் பயனுள்ளவைகளாய் முடிகின்றனவல்லவா.

94. அதன்பின்பு சந்திரமௌலி தேவக்கூட்டங்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டுப் பார்வதியைத் தமது கையால் பற்றி அழைத்துக்கொண்டு மங்கலார்த்தமாகப் பொன்குடங்கள் நீர்நிரம்ப வைக்கப்பட்டும் பூக்கோலங்கள் அழகாகப் போடப்பட்டுப் பூமியில் படுக்கை விரிக்கப்பட்டுமிருந்த பள்ளியறைக்குள் புகுந்தார்.

முற்றிற்று.

[இதற்கு மேல்பட்ட பாகம் மிக்க ஸ்ருங்கார ரஸமுடைமையாலும், அதன்றியும், அப்பாகத்தை எழுதியது காளிதாஸ கவிதானோ என்பது ஸந்தேகத்திலிருப்பதாலும், பண்டித நடேசசாஸ்திரியார் இதற்குமேல் இருக்கும் பாகத்தை தமிழில் மொழிபெயர்க்கவில்லை.]

---

இவ்விவேகபோதினியில் தொடர்ச்சியாக வந்த இந்தக் குமாரசம்பவமென்ற இந்நூலை ஜூலை௴ முதல் தேதியில் அதற்கேற்ற சில சித்திரப்படங்களுடன் புத்தக ரூபமாக வெளியிடப்படும். இதன் விலை அணா 12. ஜூலை௴ முதல் தேதிக்குள் தங்கள் பெயர்களை ரிஜிஸ்தர் செய்து கொள்ளுபவர்களுக்கும் விவேகபோதினியின் சந்தாதாரர்களுக்கும் அந் எட்டுதான் முன்பணம் அனுப்பவேண்டிய தவசியமில்லை. எழுதியனுப்பினுல் போதுமானது.